பதிவு எண் 2041. மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று



	ரூ. அ.
வருடசந்தா	3—0
6 மாத சந்தா	1–12

[வாரப்பதிப்பு.]

ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

	ரூ. அ.
வெளி நாட்டிற்கு சந்தா ...	4—0
விளம்பரம் அங்குலம் 1-க்கு ...	0—8

மாலை 2 | ஈரோடு க்ஷய-ஹு ஆடி-மீ 24-உ (8—8—26) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 15.

உண்மையான கதர்

செட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழகத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடு காங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

எஸ். ராமநாதன்,
காங்கிரஸ் கதர் போர்டு காரியதரிசி.

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜர்,
ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

கதர்! கதர்!! கதர்!!!

தமிழ் நாடு கதர் போர்டாரால்
அத்தாக்ஷி பத்திரம் பெற்ற

சுத்த கதர் ஜவுளிகள்.

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள், துவால்கள், சால்வைகள், அச்சு துண்டுகள், பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சீட்டிகள் எல்லா ரகங்களும் கைவசம் இருப்பிலிருக்கின்றன. விலை சாப்தாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,
A. முருகேச முதலி.
No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்தகதர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும் விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.
ஊத்துக்குளி S. I. Ry.

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்.

1916-ஹு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்ட்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை.

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

பார்ப்பனரல்லாத ஓட்டர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

அன்பார்ந்த அண்ணல்களே! கடந்த 18-7-26-தேதி "குடி அரசு" தலையங்கத்தின் கண், "மலையாள குடிவாரக் மசோதா" என மகுடமிட்டெழுதிய, கொடுமையினுங் கொடுமை, மாபெருங்கொடுமை, கெடுமதி கொண்ட கிராதகப் பார்ப்பனரின், பகரவொண்ணுக்கொடுமைகள் நிறைந்துள்ள வியாசத்தைக் கண்ணுற்றும் வாளாக்கிடந்து அப் பாவிகளின் பாதம் வருடித்திரியும் ஓர் சில நம் பார்ப்பனரல்லாத கோடாரிக் காம்புகளைக் கண்ணுறும் உண்மைப் பார்ப்பனரல்லாதார் எவர்தான் கண்ணீர் சொட்டாதிருப்பார்? அம் மலையாளக்குடிவார மசோதாவின் தத்துவங்களத்துணையும் தெற்றென விளக்கி தமிழ் மக்களை விழிப்புறச் செய்த நம் "குடி அரசு"க்கு தமிழுலகு என்றுங் கடமைப் பட்டுள்ளதென்பது மிகையாகா.

தமிழர்பெருமான்களே! வாக்காளர்களே! அன்றோர்நாள் பாஞ்சாலத்தில் நங்கற்புரு தெய்வங்களை ஆட்டுவித்த டயர் ஓட்வியர் போன்ற வன்மனம் படைத்தோர்களின் நிர்வாகத்தைப்பற்றி நந் தாய்நாடு எங்கும் ஒரே முகத்தான் கண்டனம் செய்தனவே, அதைவிட இன்னும் எத்துணையோ மடங்கதிகக் கொடுந்தன்மை கொண்டு கேரளத்திலே நம் பார்ப்பனரல்லாத பதிவிரதா ரத்தினங்களை வழக்கமெனும் பேய்க்கிலக்காக்கி, கற்பழித்து நாடோறும் நடுத்தெருவில் திண்டாடவிடும் நம்பூதிரி எனும் கொடுமனம் படைத்தோர்களின் அட்டகாசத்தைப்பற்றி நந்தமிழ் நாட்டில், "குடி அரசு"ம், அவ்வரசின் ஆசிரிய பெருமானும், இன்னும் சில இலை மறைகாயென ஓர் சில பார்ப்பனரல்லாத தலைவர்களுமின்றி ஏனையோர், இம்மியும் இயம்பக் காண்கிலோம். அந்தோ! பரிதாபம்! இத்தகைய லட்சணங்கொண்ட தேசபக்தர்கள்தான் (தேச சத்ருக்கள்) "நாங்கள் காந்தி சீடர்கள், எங்களுக் குங்கள் வாக்கைக் கொடுங்கள், இமயகிரியை குமரிக்கும் குமரியை இமயத்துக்கும் கொண்டுபோவோம். மேருவைப்பிடுங்கிதயிராக்குவோம்", என நந்தமிழ் மக்களைஏமாற்றி வருவதோடின்றி நாட்டிற்குரிய நற்காரியங்கள் எள்ளத்துணையும் இயற்றஹேதுக்கள் இல்லாச் சட்ட சபைகளில் பல தன்னலங்கருதிய பார்ப்பனர்களின் பலமான எதிர்ப்புக்கிடையில் சமூக சீர்திருத்தங்களாகிய தேவஸ்தான மசோதா, மலையாளக் குடிவார மசோதா போன்ற தீர்மானங்களைப்பற்றி அப் பார்ப்பனர்களின் கிராதகச்செய்கையை உலகறியும் வண்ணம் வெளிப்படுத்தி வரும் நமதருமந்த தமிழர் தலைவர் பெருமான்களை வசை மொழியாலலங்கரித்தும் வருகின்றனர். கல்லினும் கடின சித்தங் கொண்ட இப்பார்ப்பனர்கள் காந்தி சீடர்கள் எனச்சொல்லிக் கொள்வதைக் கண்டு இவ்வுலகு எட்டிசையும் எள்ளி நகையாடுகின்றது. அதினும் கருணையே உருக்கொண்ட காந்தி எம்பெருமான் இத்தகையசிஷ்ய குழாங்களின் சூழ்ச்சியைக் கண்டன்றோ, நாடோறும் கண்ணீர்விட்டுக் கதறுகின்றார்? இத்தகைய கள்ளங்கபடு சூது வாது கொண்ட பார்ப்பனர் பின்றால் அலைந்துழலும் சுயமரியாதை சற்றுமில்லா ஒரு சில பார்ப்பனரல்லாதார்களுக்கு என்று தான் புத்தி வருமோ, ஈசனுக்கே வெளிச்சம். அன்பும் அருளும் மிக்கவுள்ள எம் பார்ப்பனரல்லாத வாக்களர்களே! தேர்தல் நுங்களை நாடி ஓடி வருகின்றது, மலையாளக் குடிவார மசோதாவைப் பாதாளத்திலாழ்த்தி; தம் மாபினர் ஏகபோக பாக்கிய மனுபவிக்கச் சூழ்ச்சி செய்த அசத்திய மூர்த்தி அய்யர்களும், தேவஸ்தான மசோதா, எனும் சீரிய சட்டத்தால், தாம் கொண்டதே கோலமென உண்டு உடுத்தி உப்பரிக்கைகளில் உலாவிய வேசிக்கள்ளர்களும் வித்வசிரோன்மணிகளிடம் மண்டியிடுபவர்களுமாகிய, மகந்துகளுக்குப்பேராபத்து நேர்ந்ததைக் கண்ணுற்று ஜாதி அபிமானத்தால் அம் மகந்துகளாம் இளம் மாப்பிள்ளைகளுக்கு வக்காலத்துப் பெற்று வழக்காட நீதிமன்றமேறிய அண்டப்புளுகு அய்யங்கார்களும் பார்ப்பனக் குழந்தைகளுண்பதைப்பார்ப்பனரல்லாத குழந்தைகள் பார்ப்பின் ஓர் மாதம் பட்டினி கிடப்பேன் எனச்சபதம்பூண்ட ஜாதி இறுமாப்புப் படைத்த அனுச்சாரியார்களும் நுங்கள் பாலணுகி எங்களுக்கே உங்கள் வாக்கைக் கொடுங்கள் (ஒரு சிறிதும் செய்ய இயலாத) சட்டசபைகளில் அதைச்செய்வோம் இதைச் செய்வோம் எனப் பல்லும் பதினாறு தெரியக் காட்டி பசப்புவார்கள். அப்பசப்பிகளின் சூழ்ச்சிகளில் சிக்கி உங்கள் உயரிய வாக்குகளை கொடுத்து கேரள அநீதி மகந்துகளின் மட்டிலாக் கொடுமை, ஜாதி இறுமாப்பு போன்ற பேய்கணங்கள் நந்தாய்த் திரு நாட்டில் தாண்டவமாட இடங்கொடுத்து விடாமல் நாட்டின் நலங்கருதி உழைப்பவர்களும் மேலே குறிப்பிட்ட பார்ப்பனரின் அநீதிகளை வேரறக் கல்ல கங்கணங்கட்டியுள்ள பெரியார்களாம் நந்தமிழர் தலைவர்களுக்குக் கொடுத்து தமிழர்களும் சுயமரியாதை உள்ளவர்களென்பதை உலகறியு வண்ணம் ஸ்தாபித்து சமத்துவம் சகோதரத்வம் நந்தாய்த் திருநாட்டில் தாண்டவமாடச் செய்ய, நுங்கள் அடிபணிந்து வேண்டுகிறேன். எல்லாம் வல்ல லோகநாயகி கிருபை பாலிப்பாளாக.

R. K. பெருமாள்.

தங்க மெடல்களும், அநேக நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்ற

ராஜவைத்ய ஆஸ்ரமம்,

சரஸ்வதி விலாசம் பிரஸுக்கு எதிரில் செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

மேகரணங்கள், வெள்ளைவியாதி, ராஜபிளவை, கட்டிகள், நீடித்த மூல பவுத்திர வியாதிகளை ஆபரேஷன் இல்லாமல் சௌக்கியம் செய்யப்படும், விபரத்திற்கு எழுதுங்கள்.

ஆயிரக்கணக்கான

மூல பவுத்ர வியாதியஸ்தர்கள்

சௌக்கியமடைந்திருக்கிறார்கள்.

ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.

உலகப் பிரசித்திபெற்ற

மஹா சந்தனாதி தயிலம்.

இந்த தயிலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தயிலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்துவந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக் குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தயிலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள்தோறும் வந்துகொண்டேயிருக்கிறது. இத்தயிலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒரு முறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவு. பாட்டல் ரூ. 4—0—0

12 அவு. பாட்டல் ரூ. 2—2—0

வி. பி. தபாற்செலவு பிரத்தியேகம்.

சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவற்ற ஆண்தன்மை உண்டாவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சொற்பனஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரிதஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக்கொடுத்து, தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

வி. பி. தபாற்செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண் கோ.,

சித்த ஆயுர்வேத ஔஷதசாலை,

தெப்பக்குளம் போஸ்டு திருச்சிறாப்பள்ளி.

பிரமேககுல சம்ஹாரி.

சகல வெள்ளை, வெட்டை, தடிப்பு, ரணம் மேக நோய் 21-ம் 5-தினத்தில் தீர்க்கிறது. புட்டி ரூ. 2.

மதன கோலாகல ரசமணி மாத்திரை

இரவில் ஒரு மாத்திரை சாப்பிட்ட அரை மணி நேரத்தில் சிங்க வீரியம்போல் தாதுபுஷ்டியுண்டாக்கும். குளிகை 100-ரூ. 8. 50-ரூ- 4. 25-2

வி. பி. சார்ஜ் வேறு. கேட்லாக் இனாம்.

ஸ்ரீராமபிரான் வைத்தியசாலை,

திருச்செங்கோடு. (தென் இந்தியா)

காங்கிரஸ் இருப்பதைவிட இறப்பதே மேல்.

ஏன்?

இப்பொழுதுள்ள காங்கிரஸ் பார்ப்பன காங்கிரசே.

சென்னையில் திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் சொற்பெருக்கு.

சென்னை வண்ணாரப்பேட்டை நரசய்யர் தெருவில் நகர சபைத் தேர்தல் விஷயமாய் 29—7—26 தேதி மாலை அகில இந்திய பார்ப்பனரல்லாதார் காங்கிரசின் சார்பாய் ஓர் திரளான கூட்டம் கூடியது. அக்கூட்டத்திற்கு திவான் பஹதூர் ஓ. தணிகாசலம் செட்டியார் தலைமை வகித்தார். திருவாளர்கள் என். தண்டபாணி பிள்ளை, "தமிழ் நாடு" துணை ஆசிரியர் சொக்கலிங்கம் பிள்ளை, பி. டி. குமாரசாமி செட்டியார், "ஜஸ்டிஸ்" ஆசிரியர் கே. வி. மேனன், "திராவிடன்" ஆசிரியர் ஜே. எஸ். கண்ணப்பர், "குடி அரசு" ஆசிரியர் ஈ. வெ. இராமசாமி நாயக்கர், கே. ரெங்கய்ய நாயுடு, ஸ்ரீமதி அலர்மேலு மங்கைத்தாயாரம்மாள் முதலியோரும் மற்றும் பல பிரமுகர்களும் அக்கூட்டத்தில் காணப்பட்டனர். திருவாளர்கள் ஜே. எஸ். கண்ணப்பர், ஈ. வெ. இராமசாமி நாயக்கர், என். தண்டபாணி பிள்ளை, ஸ்ரீமதி அலர்மேலுமங்கைத்தாயாரம்மாள் முதலியோர் தேர்தல் சம்பந்தமாக நீண்ட சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அவற்றுள் திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்கள் நிகழ்த்திய பெருஞ் சொல்லின் சுருக்கமாவது:—

அக்கிராசனாதிபதி அவர்களே! கனவான்களே! நான் எந்தக் கட்சியின் சார்பாகவும் பேச வரவில்லை. தற்காலம் இந்த தேர்தலில் பொருந்த கலவரமாயிருந்து வருகையில் ஓட்டர்களுடைய கடமை என்ன என்பதை எடுத்துக் கூறவே நான் வந்திருக்கிறேன். அக்கிராசனாதிபதி அவர்கள் என்னைப்பற்றியும் என்னுடைய வேலையைப்பற்றியும் கூறினார். எத்தனையோ தேச பக்தர்கள் நாட்டிற்காக தியாகம் செய்த காலையில் நான் அவர்களுக்குத் தொண்டு புரிந்து என்னால் கூடிய அளவு ஊழியம் செய்திருக்கிறேனே ஒழிய வேறில்லை. ஒத்துழையாமைக் காங்கிரசில் கலந்துள்ள நான் இக்கூட்டத்தில் பேசலாமா வென்ற சந்தேகம் சிலருக்கிருக்கலாம். காங்கிரஸ் எப்படியிருந்தது? இப்போது என்ன ஸ்திதிக்கு வந்தது? என்ற விஷயங்கள் தெரிந்துவிட்டால் அந்தக் கவலை உங்களுக்கு இருக்காது. அந்த விஷயங்களை எடுத்துக் கூறவே நான் இங்கு வந்துள்ளேனேயொழிய, தனிப்பட்டவர்களைப் பற்றியாவது கட்சியைப்பற்றியாவது பேச நான் வரவில்லை. நாம் தனிப்பட்டவர்களைப்பற்றி பேசினால் கலகம்தான் நடக்கும். சென்ற வருடத்தில் நான் இங்கு வந்திருந்தபோது திரு. வாசு நாயுடு டிவிஷனில் பல பிரசங்கம் செய்திருக்கின்றேன். எலக்ஷன் காலத்தில் அங்கு கலகம் நடந்ததும் நாலைந்து வழக்குகள் பிரசிடென்சி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் இருந்து ஒருவாறாக முடிவடைந்ததும் உங்களுக்குத் தெரியும். அந்த சமயத்தில் ஏதோ ஓட்டர்களை ஏமாற்றி ஓட்டுப் பெற்று சென்றிருந்த போதிலும் அதன் பலன் அடுத்தடுத்து வரும் தேர்தல்களில் தெரிந்து விடும்.

இப்போது நடக்கிற தேர்தலில் அனுஷ்டிக்கப்படுகின்ற காரியங்களைப் பார்க்கையில் விரோதமும் குரோதமுமே அதிகரித்து வருகிறதென்று ஒரு பத்திரிகை குறிப்பிட்டிருக்கின்றது. அவ்வாறு விரோத உணர்ச்சி ஏற்படாமல் நாம் நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும். இப்போது பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கிற கட்சியின் பெயரை வைத்துக்கொண்டு தேர்தல் சண்டை நடந்து வருகின்றது. நம்மில் சிலரை ஒரு சாரார் தூண்டிவிட்டு தூரத்திலிருந்து வேடிக்கை பார்த்துக்கொண்டு வருகிறார்கள். ஒரு சாராரின் தூண்டுதலின்படி செய்யும் பார்ப்பனரல்லாதாருக்கு கூலியோ அல்லது வேறுவித உபசாரமோ கிடைக்கிறது. ஆகவே அவர்கள் நம்மையே திட்டும்படியாக ஏற்பட்டுவிடுகிறது. எதிரிகள் கலகப் பிரசாரம் செய்யும்படி சில ஆட்களை ஏவிவிட்டு கலகம் செய்யும்படியும் தூண்டி விடுகிறார்கள். சென்ற வருஷத்தில் கலகம் நடந்ததன் பயனாகப் பிராதுகள் கொடுக்கப்பட்டன. சிலர் தண்டிக்கப்பட்டார்கள். ஆனால் அவர்களை அவ்வித காரியங்கள் செய்யும்படி தூண்டிவிட்டவர்கள் யார் என்று கண்டுபிடித்து அவர்களை அடக்க நாம் முயற்சி செய்யவில்லை. சென்னை மாகாணம் பூராவும் கட்சி வித்தியாசத்தில் மனக் கசப்பு ஏற்பட்டு வருகிறது. அது பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கிற இரண்டையே பொறுத்திருக்கின்றது. பிராமணர்களுடைய ஆதிக்கத்தைப் போக்க பல ஆயிரம் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னதாகவே பல மகான்கள் பாடுபட்டிருக்கின்றனர். கபிலர், புத்தர், முதலியவர்களெல்லாம் பாடுபட்டனர். புத்தரும் சமணர்களும் அதற்காகவே பாடுபட்டார்கள். இராமாயணம், பாரதம், அரிச்சந்திர புராணம், இரண்ய புராணம் முதலியவைகளெல்லாம் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் போராட்டத்தையே விளக்குகின்றன. ஆகவே சர். தியாகராயரும் டாக்டர் நாயரும் தோற்றுவித்த இந்த இயக்கமானது அநேக ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக நம் நாட்டில் இருக்கிறதென்பதை அனைவரும் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

காங்கிரஸ் என்றால் என்ன?

நாம் எவ்வளவு படித்தவர்களாக இருந்த போதிலும், நமது திரு. தணிகாசலம் செட்டியாரைப்போன்ற திவான் பகதூரும், அதற்கு மேற்பட்ட பட்டதாரிகளாயிருந்தபோதிலும் ஒரு பார்ப்பனர் தர்ப்பைப் புல்லை எடுத்துக்கொண்டு வருவாரேயாகில் 'சாமி' 'சாமி' என்று அவர் காலில் விழக்கூடியவர்களாகவே இருக்கின்றோம். நம் பார்ப்பனரல்லாதார் கட்சி சுயராஜ்யத்தைப் பெறுவதற்காக ஏற்பட்டதேயொழிய உத்தியோகத்துக்காக ஏற்பட்டதல்ல. நாம் தேவடியாள்மகன், அடிமை, சண்டையில் பிடிபட்டவன் என்று பொருள்படக் கூடிய "சூத்திரன்" என்ற பதத்தால் அழைக்கப்படாமல் இருப்பதற்கும், நாம் மனிதர்கள் என்று காண்பிக்கவுமே இவ்வியக்கம் தோன்றியிருக்கிறது. இப்போது நம் எதிரிகள் காங்கிரசின் பெயரால் கூறுவதெல்லாம் சுயநலத்தைக் கருதியேதான். மகாத்மா காந்தி அவர்கள் ஒத்துழையாமை இயக்கத்தைத் தோற்றுவித்தபோது நானும் ஸ்ரீமான்கள் கலியாண சுந்தர முதலியார், டாக்டர் வரதராஜுலு நாயுடு, எஸ் இராமநாதன், தண்டபாணி பிள்ளை முதலியவர்களும் அதில் ஈடுபட்டோம். நம்முடைய குறைகளை நிவர்த்தி செய்வதே! அந்த இயக்கத்தின் தத்துவமாக இருந்தது. கிராமங்களிலுள்ள ஏழை மக்கள் ஒருவேளை சாப்பாட்டுக்குக்கூட வகையின்றி கஷ்டப்படுவதைக் கண்ட மகாத்மா கைராட்டையில் நூல் நூற்க வேண்டுமென்று போதனை செய்தார். தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்ற தத்துவத்தில் மனிதனுக்கு மனிதன் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வித்தியாசம் அடிப்பட்டுப் போகின்றது. நாங்கள் இன்னும் ஒத்துழையாமையிலேயே இருக்கின்றோம். நம் நாட்டுப் பார்ப்பனர்கள் ஒத்துழையாமை இயக்கம் மனிதனுக்கு மனிதன் சமத்துவத்திற்காகப் போராடுவதை உணர்ந்ததும் அதை நிறுத்தப் பாடுபட்டார்கள். அதற்காக இங்கும் அங்கும் பல ஆட்களைப் பிடித்து சூழ்ச்சியான வேலைகள் செய்து மகாத்மாவை காங்கிரசிலிருந்து பிரிந்து போகும்படி செய்துவிட்டனர். காங்கிரசானது மனிதனுக்கு மனிதன் சமம் என்பதையும் தீண்டாமை விலக்கையும் கதர் உற்பத்தி செய்வதையும் முற்றும் விட்டு விட்டு, இப்போது சட்ட சபைக்குச் செல்ல ஆட்களை நிறுத்தி வேலை செய்கின்றது. யார் யார் பார்ப்பனரல்லாதார்களின் நன்மைக்காகப் பாடுபடுகின்றார்களோ அவர்களையெல்லாம் கார்பொரேஷனை விட்டும் சட்ட சபையை விட்டும் விரட்டியடித்துவிட்டு அந்த ஸ்தானங்களில் பார்ப்பனர்களை நுழைய வைக்கப் பகீரதப் பிரயத்தனம் செய்கின்றனர். அல்லாமலும் காங்கிரஸ்காரர் கார்பொரேஷனுக்குச் சென்றால் வரி குறையுமென்றும் சுயராஜ்யம் வருமென்று சொல்லுகிறார்கள். யாருக்கு வரும் என்று நினைக்கிறீர்கள். பார்ப்பனர்களுக்கே. பார்ப்பனரல்லாதார்களுக்கோ தீங்கே விளையும்.

இப்போதைய காங்கிரஸ் இறப்பதே மேல்

காகிரஸ் முன்னிருந்த நிலைமையையும் இப்போதுள்ள நிலைமையையும் நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும். காங்கிரஸ் ஏற்பட்டு 40 வருஷமாகிறது. அதனால் என்ன பலன் கிடைத்தது? அது ஏற்படாததற்கு முன்பு என்ன பலன் கிடைத்தது? காங்கிரஸ் இருப்பதா மடிவதா என்று இன்று துண்டுப் பிரசுரம் வழங்கப்பட்டிருக்கிறதாக அறிகிறேன். என்னைக்கேட்டால் தற்போதுள்ள காங்கிரஸ் மடிவதே நன்று என்று சொல்லுவேன். இப்போதுள்ள காங்கிரசைக் குழி

தோண்டிப் புதைக்கவேண்டும். காங்கிரஸ் ஏற்படாததற்கு முன்பு பிராமணரல்லாதார்கள் செல்வாக்கும் யோக்கியதையும் அடைந்திருந்தார்கள். அன்றியும் சகல உத்தியோகங்களையும் நம்மவர்களே வகித்து ஒற்றுமையாக நடத்தி வைத்திருக்கிறார்கள் நீதி நிர்வாகங்கள் ஒழுங்காக நடந்து வந்தன. முன்பு கேசவலு நாயுடு என்ற ஒரு சிரஸ்தார் இருந்தார். கலெக்டர் கூப்பிட்டாலும் கையில் தடியும் வாயில் சுருட்டும் பிடித்துக்கொண்டே போய் என்னவென்று கேட்பார். கலெக்டரும் அவருக்கு மரியாதை கொடுத்து வந்திருக்கின்றார். முனிசிப் ஒருவர் இருந்தார். அவரும் அவ்வித உத்தியோகத்தைத் திறமையாக நடத்தியிருக்கின்றார். திரு. பெத்தண்ணா என்ற ஒரு தாசில்தார் இருந்தார். அவருக்கு இங்கிலீஷில் கையெழுத்துப் போடத்தான் தெரியும். ஆனால் வேலையில் திறமைசாலி. அவரை வேறு இடங்களுக்கு மாற்றினதற்காக பல தடவை இராஜிநாமா கொடுத்தார். அப்போது உத்தியோகங்களுக்கு கௌரவமும் யோக்கியதையும் மரியாதையும் ஏற்பட்டிருந்தது. காங்கிரசுக்குப் பின் தெருப் பிச்சை எடுக்கிற வகுப்பினர்களெல்லாம் உத்தியோகங்களுக்கு வந்து விட்டதால் மரியாதையைக் கெடுத்து விட்டார்கள். இவர்களை வேலையிலிருந்து விலக்கி விட்டாலோ அதிகாரிக்கு கும்பிடு போட்டோ அல்லது அந்த அதிகாரிக்கு வேண்டிய சகல சௌகரியங்களையும் செய்து கொடுத்தோ அந்த வேலையை சம்பாதித்துக் கொள்ளுவார்கள். காங்கிரஸ் ஏற்பட்டதன் பயனாக பார்ப்பனரல்லாதார்களுக்குப் பெருத்த கஷ்டமும் நீதி நிர்வாகங்களுக்கு அநீதியும் ஏற்பட்டு விட்டதென்றே சொல்லுகின்றேன். காங்கிரஸ் போர்வையைபோர்த்திக்கொண்டே நிர்வாகசபை அங்கத்தினர் பதவி முதற்கொண்டு கீழ்தர உத்தியோகம் வரையிலும் பார்ப்பனர்களே புகுந்து விட்டார்கள். காங்கிரஸ் ஏற்பட்டு முப்பது முப்பத்தைந்து வருடங்கள் வரையிலும் இவ்விதமாகவே நடந்து வந்திருக்கின்றது. காங்கிரசின் பெயரைச் சொல்லிக்கொண்டு ஒரு வகுப்பார் எல்லா உத்தியோகங்களையும் அனுபவித்து வருவதைக் கண்ட மகாத்மா காந்தி அவர்கள் எல்லோரையும் சமம் செய்யும் உத்தேசத்தோடு ஒத்துழையாமை ஆரம்பித்து ஒருவரும அரசாங்க உத்தியோகங்களுக்குப் போகக்கூடாதென்று உபதேசம் செய்தார். அப்பொழுது இந்தப் பார்ப்பனர்களெல்லாம் ஏன் அரசாங்க உத்தியோகங்களை விட்டு வெளியே வரவில்லை? இப்போது இந்த டிவிஷனுக்கு அபேட்சகராக நிற்கும் திரு. பி. டி. குமாரசாமி செட்டியாருக்கு எதிராக ஒரு பிள்ளையை நிறுத்தி வைத்திருக்கும் சுயராஜ்யக் கட்சியார், ஈ. வெ. இராமசாமி நாயக்கர் ஜெயிலுக்குப் போனார் டாக்டர் வரதராஜுலு நாயுடு ஜெயிலுக்குப் போனார் என். தண்டபாணி பிள்ளை ஆரியா முதலியோர் ஜெயிலுக்குப் போனார்கள். ஆகவே சுயராஜ்யக் கட்சி அபேட்சகருக்கு ஓட்டுக் கொடுங்கள் என்று கேட்கின்றார்கள். (நகைப்பு) காங்கிரசின் பெயரைக் கேட்டு நீங்கள் ஏமாந்து போகக்கூடாது. ஓட்டர்கள் தங்களுக்குள்ள பகுத்தறிவைக் கொண்டு சீர்தூக்கிப் பார்த்து எது நியாயமோ அதன்படி தங்கள் வாக்குகளைக் கொடுக்கவேண்டும். கார்ப்பொரேஷனில் யார் கவுன்சிலராகப் போனாலும் வரியைக் குறைக்க முடியாது. நான் முனிசிபல் சேர்மெனாயிருந்து நிருவாகம் உணர்ந்தவனாகையால் இவ்விதமாக உறுதியுடன் கூறுகின்றேன். வீட்டு வரியைக் குறைத்தால் முனிசிபல் நிருவாகம் சரியாக நடைபெறுதற்காக வேறுவிதமான வரி போடத்தான் வேண்டும். முனிசிபாலிட்டி நடைபெறுவதற்கு இத்தனை லட்சம் ரூபாய் வேண்டுமென்று ஏற்பட்டு விட்டது. முனிசிபாலிட்டியின் நிருவாகம் இன்னின்னவாறு நடைபெற வேண்டுமென்று சட்டங்களும், விதிகளும் தயாரிக்கப் பட்டிருக்கின்றன. எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் தெரிந்தெடுக்கப்பட்ட போதிலும் அங்கு சென்றதும் முனிசிபல் சட்ட திட்டங்களுக்கு அடங்கி நடப்பதாக வாக்குறுதி செய்யவேண்டியதாக யிருக்கிறது. வாக்குத் தத்தம் செய்து கொடுத்து விட்டு ஒருவரும் மீறி நடக்கமுடியாது. மீறி நடப்பவர்கள் அயோக்கியர்களே யாவார்கள். பத்துப் பதினைந்து வருடங்களாக, சென்னை குழாய்களில் பூச்சியும் புழுக்களும் வந்து கொண்டிருக்கின்றன. அதை நிவர்த்தி செய்வதாக யிருந்தால் 30 அல்லது 40 இலட்ச ரூபாய் செல்லும். அதற்கு உங்கள் மீது தான் வரிப் போடவேண்டி வரும். ஆதலால் இப்போது நீங்கள் போனபோதிலும் சரி அல்லது ஒரு பூனைக்குட்டியை கௌன்சிலராக அனுப்பிய போதிலும் ஒரே வேலைதான் செய்யமுடியும், கையெழுத்துப் போடுவதற்கு ஒரு இயந்திரம் இருக்கும் பட்சத்தில் முனிசிபல் நிருவாகம் செவ்வனே நடைபெற்று விடும்.

முனிசிபாலிட்டிக்கு தங்கள் நலனைக் கருதியே செல்லுகிறார்கள்.

முனிசிபாலிட்டிக்குச் செல்லுபவர்கள் தங்களுடைய நன்மையைக் கருதியே போகின்றார்கள். முனிசிபாலிட்டியில் பலவித உத்தியோகங்கள் இருக்கின்றன. பார்ப்பனர்களை அங்கு போகும்படி விட்டு விட்டால் மேல் உத்தியோகம் முதற்கொண்டு பங்கா இழுக்கும் வேலை வரையிலும் பார்ப்பனர்களையே போட்டு விடுவார்கள். பார்ப்பனரல்லாதார்களை அனுப்பினால் உங்களுக்கு நன்மை உண்டு. பார்ப்பனரல்லாதார்களுக்குள்ளே போட்டி ஏற்படுமேயானால் உங்கள் வகுப்பின் நன்மைக்காக யார் பாடுபடுவார்களென்று தெரிகின்றதோ அவர்களையே ஆதரிக்கவேண்டும்.

காங்கிரஸ்காரர்களுக்கு முனிசிபாலிட்டியில் வேலை கிடையாது.

காங்கிரஸ்காரர்கள் சர்க்காரோடு தான் முட்டுக்கட்டை போடுவதாகச் சொன்னார்கள். அப்படியிருக்க இவர்கள் முனிசிபாலிட்டியில் எவ்விதமான முட்டுக்கட்டையும் போட முடியாது. எல்லா விஷயங்களையும் சரிவர நடத்துவதாக வாக்குறுதி செய்து பிறகே ஸ்தானம் ஏற்றுக் கொள்பவரால் அதற்கு மீற முடியாது. அன்றியும் முனிசிபாலிட்டிக்கு வருபவர்கள் சுயராஜ்யத்துக்காக எந்த மனுவும் அரசாங்கத்தாருக்குப் அங்கிருந்து போடமுடியாது. சுயராஜ்யக் கட்சியார் மூன்றாவது வருடம் நடைபெற்ற தேர்தலில் பார்ப்பனர்களில் 3 பெயரையும் சென்ற வருடம் 5 பேரையும் அபேட்சகராகப் போட்டார்கள். இந்த வருடத்தில் 10 ஸ்தானத்துக்கும் பார்ப்பனர்களைப் போட்டுவிடலா மென்று கருதி யிருந்தார்கள். இப்போது அவர்களுடைய நிலைமை ஜனங்களுக்குத் தெரிந்து விட்டது. ஓட்டர்களாகிய நீங்களும் விழித்துக் கொண்டீர்கள். ஸ்ரீமான் வி. சக்கரை செட்டியார் சிறிது காலம் அவர்களுடன் சேர்ந்து கொண்டிருந்தார். அவரது உடம்பில் பார்ப்பனரல்லாதார் இரத்தம் ஓடுகின்றபடியால், ஒவ்வொரு சமயத்திலும் பார்ப்பனரல்லாதார்கள் நன்மைக்காகப் போராடினார். இதைக் கண்ட பார்ப்பனர் இவரைத் தள்ளிவிட்டு வேறு ஒருவரை கார்ப்பொரேஷன் பிரசிடெண்டாக்கி விட்டார்கள். திரு. புர்ரா முனிசிபல் கௌன்சிலராக வருவதற்கு திரு. சக்கரை எவ்வளவோ பிரயாசைப்பட்டார். இப்படியிருக்க ஒரு விஷயத்தில் திரு. சக்கரை பேசிக் கொண்டிருக்கையில் அவரை திரு. புர்ரா தன்னுடைய நண்பரல்லவென்று சொன்னார். (வெட்கம்) சுயராஜ்யக் கட்சியார் பார்ப்பன ரல்லாதார்களுக்கு என்னென்ன கெடுதல் செய்யவேண்டுமோ அவ்வளவும் செய்திருக்கின்றனர். திவான் பஹதூர் ஜே. வெங்கட்ட நாராயணா கார்ப்பொரேஷன் கமிஷனராக வந்தது முதல் அவரை ஒழிக்க சுயராஜ்யக் கட்சியார் பாடுபடுவானேன்? அவரிடத்தில் பூநூல் இல்லை. இவர் பார்ப்பனரல்லாத பிள்ளைகளுக்கு வேலை முதலியவை கொடுத்து ஆதரிக்கிறாராம். அதற்காக அவரைத் தள்ளி விடப்பாடுபடுகின்றார்கள். நேற்று முன் தினம் நடைபெற்ற கூட்டத்தில் ஒரு விஷயம் வாதிக்கப்பட்டது. ஒரு உத்தியோகஸ்தரை நாலைந்து வருடங்களுக்கு மேல் ஒரு ஊரில் வைக்கக் கூடாதென்று அடிக்கடி மாற்றுவது அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கிறது. அதுபோலவே சென்னைக் கார்ப்பொரேஷன் சுகாதார உத்தியோகஸ்தரை வேறு உத்தியோகத்துக்கு மாற்றி விட்டார்கள். அந்த உத்தியோகஸ்தரே 10 வருடம் கார்பொரேஷனில் வேலை பார்த்திருக்கின்றார். அப்படியிருக்க அந்த உத்தியோகஸ்தரே வேண்டுமென்று சுயராஜ்யக் கட்சியார் சொல்லுவதன் காரணம் யாதெனில் அவர் ஒரு பார்ப்பனராக யிருப்பதேயாகும். இதற்காக அவர்கள் அரசாங்கத்தாரை ஏன் கண்டிக்க வேண்டும்?

"ஜஸ்டிஸ்" "திராவிடன்" ஆகிய இரு பத்திரிகைகளுக்கும் இந்த வருடத்தில் கார்பொரேஷன் விளம்பரங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கு முன்பாக பல வருடமாக "இந்து" "சுதேசமித்திரன்" பத்திரிகைகளுக்கே விளம்பரம் கொடுக்கப்பட்டு வந்திருக்கின்றது. பார்ப்பனரல்லாதாரால் நடத்தப்படும் பத்திரிகைகளுக்கு இந்த வருடம் விளம்பரம் கொடுப்பதைக் கண்டதும் அப்பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுப்பானேன் என்று கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டார்கள். கார்ப்பொரேஷன் விளம்பரம் கொடுத்து ஆதரித்தால், அப்பத்திரிகைகள் அதிகமாக நாட்டிற்கு உழைக்க முற்பட்டுவிடுமென்றே அவர்கள் விளம்பரம் கொடுக்கக் கூடாதென்கிறார்கள். முனிசிபாலிட்டிக்குக் கட்டப்படும் வரிகளில் 100-

சென்னையில்

திரு. எஸ். ஆர். தாசும்

பார்ப்பனர்களின் தந்திரமும்.

ஸ்ரீமான் எஸ். ஆர். தாஸ் அவர்கள் ஸ்ரீமான் சி. ஆர். தாஸ் அவர்களின் தயாதி சகோதிரர். வங்காளத்தில் மாதம் நாற்பதினாயிரம் ஐம்பதினாயிரம் சம்பாதித்துக் கொண்டிருந்த பிரபல பாரிஸ்டர். இப்பொழுது டெல்லி இந்திய அரசாங்க நிர்வாக சபை அங்கத்தினராயிருப்பவர். இந்திய அரசாங்கத்திற்கு நமது தமிழ் நாட்டுப் பார்ப்பனரல்லாதார்களைப் பற்றி நமது பார்ப்பனர்கள் பத்திரிகைகளின் மூலமாகவும் கோள்சொல்லுவதன் மூலமாகவும் ஏற்படுத்தி வைத்திருக்கும் தப்பபிப்பிராயங்களை அறிந்த நமது பனகால் அரசர் டெல்லிக்குப்போய் அரசப் பிரதிநிதியாரிடம் நமது உண்மையான நிலையை எடுத்துச் சொன்னதன் பலனாய், வைசிராய் ஆச்சரியமடைந்து தமிழ் நாட்டுப் பார்ப்பனரல்லாதாரின் உண்மை நிலைமையை நேரில் அறிந்து வரும்படி தனது நிர்வாக சபையில் ஒரு பொறுப்புள்ள அங்கத்தவரான ஸ்ரீமான் எஸ். ஆர். தாஸ் அவர்களை அனுப்பியதாகத் தெரிகிறோம்.

ஸ்ரீமான் எஸ். ஆர். தாஸ் அவர்கள் சென்னைக்கு வந்ததும் சென்னையிலுள்ள பார்ப்பனத் தலைவர்கள் ஒன்று கூடி ஸ்ரீமான் ரெங்காச்சாரியார் பெயரால் ஸ்ரீமான்கள் திருப்பதி மகந்து, சர். சதாசிவய்யர், மகாகனம் சீனிவாச சாஸ்திரி, ஜட்ஜுகள் குமாரசாமி சாஸ்திரி, சீனிவாசய்யங்கார், எ. ரெங்கசாமி ஐயங்கார், வி. ராமதாஸ், எ. வி. இராமலிங்கய்யர், வி. டி. கிருஷ்ணமாச்சாரி, சர். சி. பி. இராமசாமி ஐயர், அட்வகேட் ஜெனரல் வெங்கட்டராமசாஸ்திரியார், அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், எஸ். வரதாச்சாரி, கே. பாஷ்யம் ஐயங்கார், ஜி. எ. நடேசன் ஐயர் முதலிய பல பார்ப்பனர்கள் பெரிய விருந்து நடத்தி தாஸ் அவர்களை உற்சாகப் படுத்தினார்கள். இவ்விருந்தின் செலவின் பெரும்பாகம் திருப்பதி மகந்தினுடையதென்று சொல்லப்படுகிறது. இந்த விருந்துக்கு, தன்னை சன்னியாசி என்று சொல்லிக் கொள்ளும் திருப்பதி மகந்தும், காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்தவர்களும் அரசாங்க சம்மந்தமான நபர்களுக்கு நடக்கும் விருந்து முதலியவைகளை பகிஷ்காரம் செய்து முட்டுக்கட்டை போடுகிறவர்களும் ஒத்துழையா நாற்றம் தங்கள் மீது வீசப்படுகிறதாக கூறிக்கொள்ளுகிறவர்களுமான ஸ்ரீமான எ. ரெங்கசாமி ஐயங்கார், வி. ராமதாஸ், கே. பாஷ்யம் ஐயங்கார் முதலிய பார்ப்பனர்களும் வந்திருந்ததிலிருந்தும், அவ்விருந்தில் வாலிபப் பெண்கள் மூலமாக சங்கீதம் நடத்தி ஸ்ரீமான் எஸ்.ஆர். தாசை ரம்மிக்கச் செய்ததிலிருந்தும் இவ்விருந்தின் சூழ்ச்சியும் தந்திரமும் விருந்து நடத்தியவர்களின் கருத்தும் நாம் சொல்லாமலே விளங்கும்.

ஸ்ரீமான் எஸ். ஆர். தாஸ் விருந்துக்கு திருப்பதி மகந்தைத் தருவிக்க வேண்டிய காரணம் என்ன? பெண்களை அழைத்து சங்கீதம் நடத்த வேண்டிய அவசியமென்ன? திருவாடுதுறை மடத்திலிருந்து வந்ததாகச் சில விஷயங்களை ஸ்ரீமான் எஸ். ஆர் தாசுக்கு அறிவிக்க வேண்டிய காரணம் என்ன? சர்க்காரை பகிஷ்கரிக்கும் சுயராஜ்யக்கட்சியார் அங்குவர வேண்டிய வேலை என்ன? ஸ்ரீமான் சாமி வெங்கடாஜலம் செட்டியார் கவர்னருக்குக் கொடுத்த ஒரு விருந்தின் போதே அது சுயராஜ்யக் கட்சியாருடைய விருந்தல்ல, தனிப்பட்ட நபர் செய்த விருந்துமல்ல என்று சொல்லி தப்பித்துக் கொண்ட நமது சுயராஜ்யக் கக்ஷிப் பார்ப்பனர்கள் ஸ்ரீமான் ரெங்காச்சாரியார் என்கிற ஒரு தனிப்பட்ட நபர், நிர்வாக சபை மெம்பர் என்கிற சர்க்கார் பிரதிநிதி உத்தியோகஸ்தருக்கு, அவர் சர்க்கார் வேலை சம்பந்தமாய் வந்திருக்கும் சமயத்தில் கொடுக்கப்படும் விருந்திற்கு இவர்கள் எப்படிப் போகக்கூடும்? இவற்றையெல்லாம் யோசித்துப் பார்த்தால் நமது பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாய் இந்திய அரசாங்கத்தில் நமது பார்ப்பனர்கள் இதுவரை சொல்லி வந்திருக்கும் கோள்களையும் செய்துவந்திருக்கும் சூழ்ச்சிகளையும் கெடுதிகளையும் உண்மை என்று உறுதிப்படுத்துகிறது.

க்கு 97 பாகம் பார்ப்பனரல்லாதார்களாகிய நீங்களே கொடுக்கின்றீர்கள். ஆகவே பார்ப்பனரல்லாதார்களாலேயே அதன் நிருவாகம் நடைபெறவேண்டும். இப்போது நடைபெறப்போகும் முனிசிபல் தேர்தலில் காங்கிரஸ் கட்சியார் என்றாவது சுயராஜ்யக் கட்சியார் என்றாவது அவர்கள் சொல்லுவதைக் கேட்டு ஏமாந்து போகக்கூடாது. உண்மையாக உங்களுக்கு உழைப்பவர்களை ஆதரிக்க வேண்டும். இன்னும் இரண்டு மூன்று தடவை நான் பேச எண்ணியிருக்கின்றபடியால் அவ்வப்போது மற்றும் சில விஷயங்களை எடுத்துக் கூறுவேன் என்று கூறி முடித்தார். (கரகோஷம்.)

பார்ப்பனர்களுக்கு சரியான இடி.

பார்ப்பன பார்ப்பனரல்லாதாரின் வகுப்பு வித்தியாசத்தைப் பற்றி ஸ்ரீமான் எஸ். ஆர். தாசின் அபிப்பிராயம்.

"நான் இங்கு வந்ததின் முக்கிய நோக்கமெல்லாம் இங்குள்ள விஷயங்களை நேரில் அறிந்து அரசப் பிரதிநிதிக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்ற அபிப்பிராயத்தின் பேரிலேயே யாகும். இங்கு வந்து நேரில் விஷயங்களைக் கவனிக்கிறபோது பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் ஆகிய இரு சமூகத்தாருக்குள்ளும் இருக்கும் வகுப்பு உணர்ச்சி எனக்கு நன்றாகத் தெரிகிறது. நான் எப்பொழுதும் இம்மாகாணத்திலுள்ள தாழ்ந்த நிலையிலிருக்கும் வகுப்பாரிடமே அபிமானம் கொண்டிருப்பேன். ஏனென்றால் தாழ்ந்த சமூகத்தினர் முன்னுக்கு வரும் வரையில் தேசம் சுயராஜ்யம் பெறமுடியாது. தாழ்ந்த சமூகத்தினர் முன்னுக்கு வரவேண்டுமென்று சொல்வதையும், பிற்பட்ட வகுப்பினர்—தாழ்ந்த வகுப்பினர்களென்றும் பிறத்தியாரால் அழுத்தப்பட்டுக் கிடக்கிறவர்களென்றும் நினைத்துக் கொண்டிருக்கிற ஜனங்கள் தங்கள் முன்னேற்றத்திற்காக ஏற்படுத்திக் கொண்டிருக்கும் அந்த இயக்கங்களையும் வகுப்பு இயக்கங்களென்று சொல்லவே கூடாது. அவற்றையெல்லாம் தேசிய இயக்கமென்றே சொல்லவேண்டும். ஏனெனில் தாழ்த்தப்பட்ட-பிற்பட்ட-அழுத்தப்பட்ட சமூகத்தார் முன்னணிக்கு வருகிற வரையில் தேசிய இயக்கமென்று சொல்லிக் கொண்டு வேலை செய்வது பிரயோஜனத்தைத் தராது. தாழ்ந்த வகுப்பினர் முன்னேற்றமடைய முயல்வதன் பயனாய் ஏற்கனவே முன்னணியிலிருந்து—உயர்ந்த வகுப்பார் என்று சொல்லுகிறவர்களுக்கு சிறிது பாதகம் ஏற்பட நேரும். அந்த பாதகங்களையும் தேசமுன்னேற்றத்தை உத்தேசித்து ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இவ்வித விஷயங்களையெல்லாம் தேசிய விஷயங்களாகத்தான் கருத வேண்டும். இதை உணர்ந்தால் தேசிய உணர்ச்சியுள்ள எந்தப் பார்ப்பனனும் உங்கள் இயக்கத்தைத் தடுக்க முன்வரமாட்டான். சில பார்ப்பனர்களாவது யோக்கியர்களாக இருக்கக்கூடும். அப்படியிருந்தால் அவர்களுடைய ஒத்தாசை உங்களுக்குக் கிடைக்கும். பார்ப்பனர்களும் அநாவசியமாக பார்ப்பனரல்லாதார்களுடைய முன்னேற்றத்தைக் கண்டு பயந்து இடைஞ்சல் செய்யமாட்டார்கள். புத்திசாலிகளாயுள்ள பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாருக்கு உதவியாயிருந்து, பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கிற வகுப்புப் பிரச்சினையை தேசீப் பிரச்சினையாக்கி, விரைவில் தேசம் முன்னேறுவதற்கு வேண்டிய உதவி செய்ய வேண்டும். பார்ப்பனரல்லாதார் பார்ப்பனரைக் கொஞ்சமாவது நம்ப வேண்டும்", என்று பேசியிருக்கிறார்.

இம்மாதிரி ஸ்ரீமான். எஸ். ஆர். தாஸ் அவர்கள் பேசி வகுப்புக் கிளர்ச்சிகளை ஆதரித்து "அதைத் தேசயக் கிளர்ச்சியாகக் கருத வேண்டுமே யல்லாமல் வகுப்புக் கிளர்ச்சி என்று அதை அடக்கப் பிரயத்தனப் படக்கூடாது" என்று சொன்னதோடல்லாமல் இவ்வித கிளர்ச்சிகளுக்குத் தன்னாலான உதவியும் செய்வதாக வாக்களித்தும போயிருக்கிறார். இப்படியிருக்க 'சுதேசமித்திரன்" இவற்றைத் தனக் கனுகூலமாகத் திருத்தி எழுதிக் கொண்டு "ஜஸ்டிஸ் கட்சிக்குச் சாட்டை" என்று விஷமத் தலையங்கமிட்டு வகுப்புப் பேச்சும் வகுப்புத் துவேஷமும் வேண்டாமென்று அவர் சொன்னதாகக் குறிப்பு எழுதி, முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைப்பது போல் யோக்கியப் பொறுப்பற்ற பிரசாரம் செய்திருக்கிறான். ஆகையால் ஒருவரும் இதை நம்பாமல் ஆங்காங்கு உயர்ந்த வகுப்பார்களால் கொடுமைப் படுத்தப்பட்டுவரும் ஒவ்வொரு சமூகத்தாரும் தைரியமாய் வெளியில் வந்து தங்களுக்கிருக்கும் கொடுமைகளை எடுத்துச் சொல்லி அதைப் போக்கிக் கொள்வதற்குக் கங்கணம் கட்டிக் கொள்ளவேண்டும். தற்காலம் நமது நாட்டின் தேசீய வேலை இதுவே யாகுமேயல்லாமல், வயிற்றுப் பிழைப்புக்காரர்களும் பஞ்ச தந்திரப் பார்ப்பனர்களும் சொல்லிக் கொண்டு திரியும் சுயராஜ்யம், தேசம், விடுதலை, காங்கிரஸ், சர்க்காரை அழிப்பது என்கிற அர்த்தமற்றதும் முட்டாள் தனமானதும் சூழ்ச்சிகளும் தந்திரங்களும் சுயநலமும் நிறம்பியதான போலிவார்த்தைகள் அல்லவெனபதைப் பொது மக்கள் உணர வேண்டுகிறோம்.

கோயமுத்தூர் ஜில்லா போர்டு தேர்தல்.

இம்மாதம் 4-ம் தேதி கோயமுத்தூரில் நடந்த ஜில்லா போர்டு தலைவர் தேர்தலில் ஸ்ரீமான் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் அவர்களும் ஸ்ரீமான் வி. சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர் அவர்களின் இளைய சகோதிரரான ஸ்ரீமான் பழனிசாமிக் கவுண்டர் அவர்களும் அபேக்ஷகர்களாக நின்றதில் ஸ்ரீமான் முதலியார் அவர்கள் மூன்றில் இரண்டு பங்குக்கு மேற்பட்ட அங்கத்தினர் ஓட்டுகளால் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதைக் கேட்க வாசகர்கள் மிகுதியும் சந்தோஷமடைவார்களென்றே எண்ணுகிறோம்.

ஸ்ரீமான் முதலியார் அவர்கள் கோயமுத்தூரில் பல தலை முறையாய் இருந்து வரும் கௌரவமும் பிரபலமுமுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர். பத்து லட்சம் இருபது லட்சம் முதல் வைத்து நடத்தும் பல கூட்டுறவு பாங்கிகளுக்கு பிரசிடெண்டாகவும் டைரக்டராகவும் இருந்து வருபவர். ஏறக்குறைய கோயமுத்தூர் ஜில்லாவிலேயே 24-வயதிற்கு மேற்பட்டு 36-வயதிற்கு உட்பட்டிருக்கிற ஒவ்வொரு வாலிபருக்கும் ஆப்த நண்பனாகவும் உற்ற மந்திரியாகவும் இருந்து வருபவர். அவர் பெரிதும் குடியானவர்களிடத்திலும் ஏழைமக்களிடத்திலும் அன்புகொண்டவர். உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி என்கிற வித்தியாசமே கொஞ்சமும் அற்றவர். ஏறக்குறைய பத்துப் பதினைந்து வருஷகாலமாகவே கோயமுத்தூர் முனிசிபல் கவுன்சிலராகவும் ஐந்தாறு வருஷகாலமாய் முனிசிபல் சேர்மெனாகவும், தென்னிந்திய ரயில்வே போர்டு அட்வைசரிக் கமிட்டியிலும், தமிழ் சர்வகலாசாலைக் கமிட்டியிலும் அங்கத்தினராகவும் இருந்து வருகிறார். அதோடு கூட 4, 5 வருஷகாலம் கோயமுத்தூர் தாலூகா போர்டு பிரசிடெண்டாகவும் இருந்து வந்ததோடு சென்ற மூன்று வருஷகாலம் கோயமுத்தூர் ஜில்லா போர்டுக்குப் பிரசிடெண்டாகவும் இருந்து வந்திருக்கிறார்.

இவ்வளவு செல்வாக்கும் பெருமையும் அந்தஸ்தும் உடையவர் கோயமுத்தூர் ஜில்லா போர்டுக்கு மறுபடியும் பிரசிடெண்டாய்த் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதில் அதிக ஆச்சரியப்படத்தக்க விஷயம் ஒன்றுமில்லை யானாலும் போட்டி யன்னியிலேயே தேர்ந்தெடுக்கப்படாமல் போனது கோயமுத்தூர் ஜில்லா போர்டு ஓட்டர்கள் தங்களுடைய புத்திசாலித்தனத்தைக் காட்டிக்கொள்ள வாய்த்த ஒரு சந்தர்ப்பத்தை இழந்து விட்டார்களென்று தான் சொல்ல வேண்டும்.

மகாத்மா காந்தியை காங்கிரஸ் பிரசிடெண்டாகத் தேர்ந்தெடுத்த காலத்திலும் அபிப்பிராய பேதமும் எதிர் ஓட்டுகளும் சிலது இருந்ததென்றால், நமது முதலியார் தேர்தலில் எதிர் ஓட்டு இருப்பது அதிசயமல்லவென்றே சொல்லுவோம். ஆனால் தேர்தல் காலத்தில் ஸ்ரீமான் முதலியார் விஷயத்தில் கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள பெரிய ஜமீன்தாரர்களும் மிராஸ்தாரர்களும் மற்றும் பெரிய பாங்கர்களும் பெரிய இயந்திரசாலைக்காரர்களும் வியாபாரிகளும் பொது ஜன சேவையிலீடுபட்டவர்களும் முதலியாருக்காக எடுத்துக் கொண்ட ஊக்கமும் உணர்ச்சியும் அளவிடத் தகுந்ததல்ல.

மற்றும் சகல வகுப்பார்களிடமும் நமது முதலியாருக்கு செல்வாக் கிருக்கிறது என்பதற்கு உதாரணமாக தேர்தல் காலங்களிலும் மற்ற சமயங்களிலும் நடந்த வைபவங்களையும் பிரயத்தனங்களையும் பார்த்தால் நன்றாய் விளங்கும்.

ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களாகிய ஸ்ரீமான்கள் எம். சம்பந்த முதலியார், வெரிவாடு செட்டியார் வகையராக்களும், காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியாரான அதன் காரியதரிசி ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகஞ் செட்டியார் வகையராக்களும், வர்ணாசிரம பார்ப்பனரான ஸ்ரீமான் சி. வி. வெங்கிட்டரமணய்யங்கார் முதலியவர்களும, ஒத்துழையாதாரைச் சேர்ந்த ஸ்ரீமான் டி. எஸ். டாண்டே முதலியவர்களும், கொங்கு வேளாள சமூகத்தில் முக்கியஸ்தர்களான கொங்கு வேளாள சங்கக் காரியதரிசி பொள்ளாச்சி ஸ்ரீமான் இரத்தினசபாபதிக் கவுண்டரவர்களும், வடகரை வே[illegible] சமூகத்தில் முக்கியஸ்தரான [illegible] தாலூகா போர்டு பிரசிடெண்டு ஸ்ரீமான் ராஜாக் கவுண்டர் என்கிற நஞ்சப்பக் கவுண்டரவர்களும், வேட்டுவக் கவுண்டர் சமூகத்தில் பிரதானஸ்தரான அப்பிச்சிமார் மடாதிபதி ஸ்ரீமான் ஆண்டமுத்துக் கவுண்டரவர்களும், ஜமீன்தாரர்களில் முக்கியஸ்தரான ஊத்துக்குளி ஜமீன்தாரும் பொள்ளாச்சி தாலூகா போர்டு பிரசிடெண்டுமான ஸ்ரீமான் துரை ராஜா அவர்களும் பட்டக்காரர்களில் முக்கியமானவர்களுள் ஒருவரான சங்கராண்டாம் பாளையம் பட்டக்காரர் ஸ்ரீ. வேணுவுடையாக்கவுண்டரவர்களும், நாயுடு சமூகத்தலைவர்களான ரெங்கவிலாஸ் மில் ஏஜண்டு ஸ்ரீமான் பி. எஸ், குருசாமி நாயுடுகார், பல்லடம தாலூகா போர்டு பிரசிடெண்டு ஸ்ரீ லட்சுமி நாராயணசாமி நாயுடுகார் முதலியவர்களும் பஞ்சமர் என்று சொல்லப்படும் வகுப்புத் தலைவரான ஸ்ரீமான் முனியா மேஸ்திரி முதலியவர்களும் ஒக்கிலியக் கவுண்டர் சமூகத்தாரில் பிரதானப்பட்டவர்களான ஸ்ரீமான் ள் பட்டக்கார வீரப்பகவுண்டர் அவர்கள், புளியம்பட்டி நிஞ்சப்பகவுண்டர் அவர்கள் முதலியவர்களும் நாட்டுக்கோட்டை நகரத்தார்களில் சிறந்தவரான காளீஸ்வரா மில் ஸ்ரீமான் சாத்தப்ப செட்டியார் அவர்களும் மகமதிய சமூகத்தின் சிரேஷ்டர்களான ஈரோடு ஜனாப் கா அ. ஷேக்தாவூத் சாயபு பகதூர், உடுமலைப் பேட்டை ஜனாப் காஜா முகய்யதின் சாயபு பகதூர் முதலியவர்களும இன்னமும் இந்த ஜில்லாவில் பெரிய வியாபாரிகளான ஸ்ரீமான்கள் வி. எஸ். செங்கோட்டய்ய முதலியார், மு. ச. முத்துக்கருப்பஞ் செட்டியார் போன்றவர்களும், சன்னியாசிகளில் ஸ்ரீலஸ்ரீ கைவல்லிய சுவாமியார் போன்றவர்களும் ஸ்ரீமான் முதலியாரவர்களைத் தேர்தலுக்கு நிற்கும்படி வற்புறுத்தியும் அவருக்காக ஊக்கத்துடன் பிரயத்தன மெடுத்துக் கொண்டுமிருக்கிறார்கள் என்றால் மற்றபடி முதலியாரின் குணாதிசயங்களைப் பற்றியும் அவரது செல்வாக்கைப் பற்றியும் யாரும் தெரிந்து கொள்ள வேண்டியதிருக்காதென்றே எண்ணுகிறோம்.

ஸ்ரீமான் முதலியார் அவர்களை இந்த ஜில்லாவின் சார்பாய் சட்டசபை அங்கத்தினராக்க வேண்டுமென்கிற எண்ணங்கொண்டே இவ்வளவு பெரிய மனிதர்களும், இந்த ஜில்லா போர்டு தலைவர் ஸ்தானத்திற்கு ஸ்ரீமான் முதலியார் அவர்கள் அவ்வளவு லட்சியமில்லாதிருந்துங் கூட, ஒரே மூச்சாய் இவரை பிரசிடெண்டாக ஆக்கியிருக்கிறார்கள். இதுபோலவே சட்டசபைத் தேர்தல் விஷயத்திலேயும் மேற் சொன்ன கனவான்களெல்லோரும் முதலியாருக்காக வேண்டிய வேலை செய்வதாக வாக்குறுதி கொடுத்திருப்பதோடு இது முதலே முயற்சி செய்து கொண்டு வருவதாகவும் தெரிய வருகிறது.

ஸ்ரீமான் முதலியார் அவர்கள் சட்டசபை மெம்பர் பதவியை அடைவதிலோ அதன் மூலமாய் தன்னால் செய்யக் கூடுமென்று நினைக்கிற விஷயங்களைப் பொது ஜனங்களுக்குச் செய்வதிலேயோ நமக்கு எவ்வித ஆட்சேபணையுமில்லை. ஆனால் இப்போது தேச முன்னேற்றத்திற்கு அவசியமானதும் மகாத்மாவின் உபதேசமானதுமான தீண்டாமை விலக்கு, கதர் என்கிற இவ்விரண்டு விஷயத்திற் கனுகூலமாக தமது பெருமையையும் செல்வாக்கையும் பதவிகளையும் கொஞ்சம் உபயோகப் படுத்துவார்களே யானாலும் அதைத்தான் நாம் உண்மையான பொது நல சேவை, தேச கைங்கரியம் என்று சொல்வோம். தீண்டாமை விலக்கு விஷயத்தில் நமது முதலியார் சுமார் 20-வருஷத்திற்கு முன்பாக யிருந்தே அனுகூலமாயிருக்கிறார் என்பதும் அவருக்கு அவ்வித வித்தியாசமில்லை என்பதும் நமக்குத் தெரிந்த விஷயமே. ஆனால் கதர் விஷயத்தில் கதரின் தத்துவங்களை உணர்ந்திருந்தும் வீட்டில் கதர் வஸ்திரங்களை உபயோகப் படுத்திக்கொண்டு வந்தும் வெளியில் கதர் அணிவதற்கு வெட்கப்படுகிறாரா அல்லது பயப்படுகிறாரா என்பது நமக்குப் புலனாகவில்லை. இதுவரையில் எப்படியிருந்து வந்தபோதிலும் இனிமேலாவது கதரைத் தவிற வேறு வஸ்திரங்கள் உடுப்பதில்லை என்றும் தன்னுடைய செல்வாக்குகளை கதருக்கு உபயோகப்படுத்துவதில் எவ்வித ஆட்சேபணையுமில்லை என்றும் உறுதி சொல்வாரேயானால் சட்ட சபைப் பதவியை அடைவதற்கு இப்பொழுது நிற்கும் நான்கு ஐந்து அபேட்சகர்களில் நமது முதலியார் முதன்மையானவர் என்று சொல்லக்கூட நாம் முன் வருவோம். அதில்லாதவரையில் மற்றவர்களைப் போல் இவரும் ஒருவர் என்றுதான் சொல்லுவோம்.

இந்தியா சட்ட சபைத் தேர்தல்.

செங்கல் பட்டு ஜில்லா போர்டு பிரசிடெண்டு திரு. ராவ் பஹதூர் ௩.ம. கிருஷ்ணசாமி ரெட்டியார், பி. ஏ., அவர்கள் இந்தியா சட்ட சபை ஸ்தானத்திற்கு செங்கல்பட்டு தென் ஆற்காடு ஜில்லாக்களின் தொகுதிக்கு ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக வரப்போகும் தேர்தலில் ஒரு அபேக்ஷகராய் நிற்பதாக நமக்கு அறிவிக்கிறார்.

தானத்திற்குச் சற்பாத்திரம் யார்?

ஒவ்வொரு ஜன சமூகமும் முன்னுக்கு வரவேண்டுமானால் குருட்டு நம்பிக்கைகளும் பிரயோஜனமற்ற காரியங்களிலுள்ள செய்கைகளும் போகவேண்டும். அநேக காலமாக அவரவர்களுக்குத் தகுந்தபடி தான தர்மம் செய்து கொண்டே வருகிறார்கள். தானதர்மம் ஏன் செய்யவேண்டும்? யாருக்குச் செய்தால் நல்லபலன்? யாருக்குச் செய்தால் தீயபலன்? என்பதை ஆராய்வதேயில்லை. தர்மமென்பது ஒவ்வொருவருடைய கடமை என்பதை எல்லாத் தேசங்களும் எல்லா ஜனங்களும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். தானமென்பது சுவர்க்கத்திலும் நரகத்திலும் கீழ் உலகத்திலும் மேல் உலகத்திலும் இன்னொரு ஜென்மத்திலும் கரையேற்றுகிறது என்னும் பயங்கரமான சாஸ்திரமோ, மூடநம்பிக்கையோ, நம்தேசத்தில் தவிர வேறு எந்த தேசத்திலும் எந்த ஜனங்களிடத்தும் இல்லை. பாரமார்த்திக விஷயங்களை முதல் முதல் கண்டவர்கள் நம் ரிஷிகள் என்றும் ஆனதால் அவர்கள் சொல்லும் விஷயங்களை நம்பவேண்டுமென்றும் சமாதானம் சொல்லப்படுகிறது. ரிஷிகள் சொன்ன சாஸ்திரங்களின் கருத்துக்களையும் இக்காலத்து அறிவாளிகள் சொல்லும் அபிப்பிராயங்களையும் ஒத்துப் பார்த்து இவை இரண்டிற்கும் ஒத்துவராத நடவடிக்கைகள் சிலதை யாராவது சரியல்லவென்று சொன்னால் 'பார்ப்பானைத் திட்டுகிறான், சாஸ்திரங்களைப் பொய் என்று சொல்லுகிறான்' என்று சொல்ல ஒவ்வொரு மூட பணக்காரன் மத்தியிலும் சிலர் இருக்கிறார்கள். ஒன்றே நம் சாஸ்திரப் பிரகாரம் செய்யவேண்டும், அல்லது நம் புத்திமான்கள் சொல்வதில் நம் புத்தியையும் செலுத்தி நடக்கவேண்டும். இவை இரண்டும் நமக்குச் சத்துரு. சாஸ்திரம் நாம் படிக்கக்கூடாது. நாம் பார்க்கக் கூடாது. தன் ஜாதியின் சௌகரியத்திற்கு என்னென்ன பித்தலாட்டமும், பிரட்டும் செய்யவேண்டுமோ அத்தனையும் செய்திருக்கும் பார்ப்பானிடந்தான் நாம் புத்தி கேட்கவேண்டும். ரிஷிகள் சொன்ன சாஸ்திரத்தின் உண்மையைச் சொன்னாலும், இக்காலத்து புத்திமான்கள் சொல்வதைச் சரியென்றாலும் பார்ப்பானது உயர்வும் பிழைப்பும் கெட்டுவிடும். அவன் எப்படிச் சொல்லுவான்? நாமே நம் புத்தியினால் ஆராய்ந்து தெரிந்து கொள்ள வேண்டும். அவ்வுண்மைகளை நமக்குத் தெரியப்படுத்தவே 'குடி அரசு" தோன்றியிருக்கிறது.

வாழ்க்கையின் சந்தோஷமான கலியாணம், சீமந்தம், கிரகப்பிரவேசம் முதலான சுபகாரியங்களிலும், மரணம், கருமாந்திரம், சிரார்த்தம் முதலான அசுப நாட்களிலும் தானம்வழங்குவது வழக்கமாய் இருக்கிறது. இந்தச் சமயம் மனிதன் பிரமையினாலும் பயத்தாலும் கட்டுப்படுகிறான். அப்பொழுது தான் தானத்தால் பார்ப்பான் ஏமாற்றிப் பொருளைப் பறித்துக் கொள்ளுகிறான். 'தானம் எங்களுக்கே கொடுக்கவேண்டும். நாங்கள்தான் அதிகாரி' என்றும் கலியுகத்திற்குப் பிரமாணமான பராசஸ்மிருதியும் பார்ப்பானுக்கே தானம் கொடுக்கச் சொல்லியிருக்கிறது என்று பார்ப்பார்கள் சொல்லுகிறார்கள்.

சைவர்களும் வைஷ்ணவர்களும் ஸ்மார்த்தஸ்மிருதியை நாங்கள் ஒப்போம் என்பது இருக்கட்டும். எவன் தானத்தால் பலன் உண்டென்று நம்புகிறானோ, நம்பிச்செய்கிறானோ, அவனுக்குப் பிரமாணம் பராசஸ்மிருதியை நாமும் ஒத்துக் கொண்டு அதில் தான பாத்திரம் விவரித்திருப்பதைக் கவனிப்போம். பாத்திர மெனப்படுவது கீழ் விழுதலின்றும் தடுக்கப் படுவது எனப் பொருள் படும். அதாவது நரகத்திற்குப் போகிறவனைப் போகாமல் செய்கிறவன் என்பது. அவன் யார்? பிராமணன். சரி, பிரம்மஞ்ஞான முடையவன் பிராமணன் என்னும் வடமொழியும், அந்தணனென்போன் எல்லாவுயிரிடத்தும் அன்பு பூண்டு ஒழுகுகிறவன் என்கிற தென்மொழியும் நிற்கட்டும். இவ்விடம் தானம் வாங்கும் பிராமணன் தன்மை என்ன? வேதம் வாசித்திருக்க வேண்டும். அதுவும் போதாது. தபஸ் வேண்டும். அதுவும் போதாது. ஒழுக்கமும் வேண்டும். இம்மூன்றும் நிறைந்த பிராமணன் வாங்கின பொருளை நல்வழியில் செலவு செய்பவனாக இருக்கவேண்டும். இவனும் ஒரு வேளை தானம் வாங்கினால் பின் வாங்கும் யோக்கியதை உடையவனன்று. ஏன்? இவனிடம் ஒருவனைத்தான் நரகத்தினின்றும் மீட்பதற்குப் புண்ணியமிருக்கும். தேவகர்மமோ பிதுர்கர்மமோ அன்னியனுக்காக ஓர் நாள் செய்திருந்தால் அவனுக்குக் கொடுக்கும் எல்லாதானமும் வீண். தன் காரியத்திலேயே கருத்துடையவனுக்கே கொடுத்தால் தான் செய்யும் காரியம் கெடும். இந்தப் பார்ப்பானுக்குக் கொக்குப் பார்வையுடையவன் என்று ஸ்மிருதியில் எழுதியிருக்கிறது. இதன் அர்த்தம் வஞ்சகனுக்குக் கொடுத்தால் வாழ்க்கை சுருங்கும். ஒரு புத்திரனே புத்திரன்; மற்ற புத்திரர்களெல்லாம் காம புத்திரர்கள். காம புத்திரர் உடையவர்களுக்குத் தானங் கொடுத்தால் புத்திர ஹானி உண்டாகும். கற்புடைய மனைவியில்லாதவன், பிரமச்சாரிய விரதத்திலிருந்து தவறியவன், புரோகிதன், குருக்கள், தானத்தை வாங்கி யிருப்பாய் வைத்திருப்பவன், வேதத்தை விற்றவன், கூலிக்கு வித்தை சொல்லுகிறவன், தானத்தைத் தேடித்திரிகிறவன், இருவேளை உண்ணுகிறவன், மூன்று நாட்களுக்கு மேல் ஆகாரத்தை வைத்திருப்பவன், இப்படிப்பட்டவர்களுக்குக் கொடுக்கும் தானம் வீணாவது மன்றியில், கொடுத்தவன் குடும்பங்கெட்டு நரகத்திற்கும் போகிறான். "நாங்கள் எப்படியிருந்தாலும் நீங்கள் கேட்கக் கூடாது. பிராமணன் பிராமணன்தானே" என்று அவர்களும், "எப்படி இருந்தாலும் பார்ப்பான் பார்ப்பான்தானே. அதையெல்லாம் பார்த்தால் தீருமா? கொடுப்பது நம் கடமை" என்று நாமும் சொல்லுகிறோம். எந்த ஸ்மிருதி பார்ப்பானுக்குப் பிரமாணமோ, எந்த ஸ்மிருதி தானம் செய்தால் புண்ணியம் உண்டு என்று சொல்லுகிறதோ, அந்தப் பராசஸ்மிருதி, இவன் தானத்திற்குத் தக்கவன், இவன் தகாதவன் என்று உணராத குற்றத்தால் வாங்கினவனையும் கெடுத்துக் கொடுத்தவனும் நரகத்திற்குப் போகிறான் என்று விதித்திருக்கிறது. இதை யாரும் மறுக்க முடியாது. இருடிகள் வார்த்தையிது. அநேக குடும்பங்கள் தான தர்மம் செய்தது எனக்குத் தெரியும். சரியான தானமாய் இருந்தால் இப்பொழுது தரித்திரத்தின் எல்லைக்குள் வந்தும், வந்துகொண்டுமிருக்க வேண்டியதில்லை. "நீங்களும் கெட்டுப் போனீர்கள். நாங்களும் கெட்டுப் போனோம். இப்படியும் அப்படியும் சாஸ்திரம் சொல்லும். அதையெல்லாம் பார்த்தால் காரியம் நடக்க வேண்டாமா? கலியுகமல்லவா இது! என்னதான் பாபம் செய்தாலும் காயத்திரி ஜபிக்கிறோம். பாபம் அதில் போய்விடும்." என்று சொல்வதையும் நாம் கேட்கிறோம். காயத்திரியென்பது கருமாந்திரத்துக்கோ காணிக்கைக்கோ யார் கூப்பிட வருகிறார்களென்று சுற்றிச் சுற்றிப்பார்த்து மூக்கைப் பிடித்து முணு முணுப்பது அல்ல. காயத்திரி ஜபிக்கும்போது ஒவ்வொரு பதத்திற்கும் 72-பிராணாயாமம் செய்ய வேண்டும். காயத்திரி மந்திரத்தின் அர்த்தம் தெரிந்த பார்ப்பான் இருப்பான் என்பது சந்தேகம். மந்திரத்தின் அர்த்தம் தெரிந்து, பிராணாயாமத்தின் உண்மை தெரிந்த பிராமணன் இல்லவே இல்லை.

நல்ல பூமியாய் இருந்து எருப்போட்டுத் தண்ணீர் பாய்ச்சி, உழுது, கல்புல் பொறுக்கி, விதைத்தால் பலன் உண்டாகும். விதை போட பூமி யென்றிருந்தால் போதுமா? தானம் வாங்குவதற்கு உத்தமமான பிராமணர்கள் அகப்படுவது கஷ்டம். மகா பாபிகள் வேஷம் போட்டு ஏமாற்றித் தானத்தைப் பறித்துக் குடும்பங்களைக் கெடுத்து விடுவார்கள் என்று பராசர் உணர்ந்து, தன் சுற்றத்தார், தன் தங்கை, தன் தமக்கை, தன் அத்தை, தன் பெண் இவர்களுக்குக் கொடுக்கும் தானம் உத்தமமான பிராமணர்களுக்குக் கொடுப்பதை விட கோடிப்பங்கு புண்ணியம் என்று விதித்தார். தான பாத்திரம் சொன்ன ஸ்மிருதியில் பராசர் சொன்ன வாக்கியம் இதுவே. இதனால் சற்பாத்திரர் யார் யென்பது விளங்கியிருக்கும்.

வஞ்சகன், தன் காரியத்தையே பெரிதாக நினைப்பவன், பொய் சொன்னவன், வியவகாரத்தை விளைவித்து வியவகரிப்பவன், நாட்டியம் பழக்குகிறவன், அவர்களுக்கு உடந்தையாக இருப்பவன், பாடகஸ்தன், சேவகன், அன்னத்தைப் பின்னம் பண்ணி விற்பவன், இன்னும் அநேக துன்மார்க்கச் செய்கைகள் உடையவர்களுக்கல்லவா நம் தானம் போய்ச் சேருகிறது. சாஸ்திரத்தின் நியமமும் கருத்தும் இவையல்லவே. அநேக ஜனங்களின் சோற்றைப் பிடுங்கிச் சேர்த்து வைத்துக் கொண்டிருப்பவன் ஒன்றோ இரண்டோ ஏக்கா பூமியை ஓர் அயோக்கியனுக்குக் கொடுத்து விட்டால் புண்ணியம் வந்து விடுமா? ஊரார் வயறெரிய அநேக கொடுமை செய்து பணத்தைச் சேர்த்துத் தானும் தன் சுற்றமும் தின்னாமல் சாகையில் ஒன்று, செத்தபின் ஒன்று, கருமாந்திரத்திற்கு ஒன்று, இப்படி மூன்று பசுவைத் தானங்கொடுத்தால் சுவர்க்கத்திற்குப் போய் விடுவானா? இல்லவே இல்லை.

(தான விஷயத்தை இத்துடன் நிறுத்தி இதன் பிற்பகுதிகளை அடுத்தமுறை எழுதுவோம்.)

கைவல்யஸ்வாமியார்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே

குடி அரசு.

அக்ஷய-ஞு ஆடி-மீ 24 உ

பார்ப்பனர் சூழ்ச்சிக்குத் தோல்விகள்.

——:o:——

சென்னையிலும் மற்றும் பல வெளியிடங்களிலும் சுயராஜ்யக் கட்சி, காங்கிரஸ் என்கிற தேசீய வார்த்தைகளின் பெயரால் நமது பார்ப்பனர்கள் செய்து வந்த சூழ்ச்சிகளுக்கு இவ்வாரத்தில் பெருந்தோல்வியென்றே சொல்ல வேண்டும். சென்னையில் சென்ற 4-ம் தேதி நடந்த தேர்தல்களின் முடிவானது நமது பார்ப்பனர்களுக்கு முற்றும் விரோதமாகவே போனதோடு, அங்குள்ள பாமர ஜனங்கள் பார்ப்பனர்களின் சூழ்ச்சியை அறிந்து கொண்டோம், அறிந்து கொண்டோம் என்று ஆரவாரம் செய்து விட்டார்கள். சென்னைத் தேர்தல்களில் முக்கியமாய் டாக்டர் நடேச முதலியாரை ஒழிக்க வேண்டுமென்பதுதான் நமது பார்ப்பனர்களுக்குப் பெரிய ஆத்திரமாயிருந்தது. அதற்காக வேண்டி ஸ்ரீமான் ஓ. கந்தசாமி செட்டியார் அவர்களைப் பிடித்து, அவருடைய ராவ் பகதூர் பட்டத்தையும் விடச்செய்து, டாக்டர் நடேச முதலியாருக்கு விரோதமாய் நிறுத்தி, எவ்வளவோ பொய் பிரசாரங்களையும் இழிவுப் பிரசாரங்களையும் செய்து, ஆயிரக் கணக்கான ரூபாய்களை செலவு செய்யத் துணிந்தும் கடைசியாய் ஓட்டர்களை ஏமாற்ற முடியாமல் போய் விட்டது.

இது போலவே ஸ்ரீமான் குமாரசாமி செட்டியார் அவர்களையும் தோற்கடிக்க வேண்டுமென்கிற எண்ணங் கொண்டு, அங்கும் ஸ்ரீமான் இராமலிங்கம் பிள்ளை என்கிற ஒருவரை நிறுத்தி, எவ்வளவோ சூழ்ச்சிப் பிரசாரங்களெல்லாம் நடத்தியும் பயன்படாமல் அளவுக்குமிஞ்சிய தோல்வி ஏற்பட்டிருக்கிறது.

டாக்டர் நடேச முதலியார், குமாரசாமி செட்டியார் ஆகிய இரு தலைவர்களையும் தோற்கடித்துவிட்டால் பார்ப்பனரல்லாதாரையே ஒழித்து விட்டதாகுமென நினைத்துக் கொண்டு செய்த பகீரதப் பிரயத்தனத்தின் பலன், நமது பார்ப்பனர்களை மறுபடியும் இவ்விதக் கெட்ட எண்ணத்தில் தலையிடுவதற்கே கருதுவதற்கில்லாமல் செய்து விட்டதென்றே சொல்லலாம். பார்ப்பனரல்லாத கட்சியின் பெயரால் நின்ற ஸ்ரீமான் குமாரசாமி செட்டியாருக்கு 614 ஓட்டுகளும், பார்ப்பனக்கட்சியான சுயராஜ்யக் கட்சியின் சார்பாய் நின்ற ஸ்ரீ இராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கு 47 ஓட்டுகளுந்தான் கிடைத்திருக்கிறது. டாக்டர் நடேச முதலியார் அவர்களுக்கு 454 ஓட்டுகளும் ராவ் பஹதூர் பட்டத்தை விட்ட ஸ்ரீ கந்தசாமி செட்டியாருக்கு 194 ஓட்டுகளுமே கிடைத்திருக்கிறது. சென்ற வருஷங்களில் பார்ப்பனரல்லாதார் கட்சிக்குப் பார்ப்பனர்களால் சென்னைத் தேர்தல்களில் பெருந் தோல்வி ஏற்பட்டிருந்தாலும், பார்ப்பனக் கூலிகளால் வசைமொழிகளும் அடிதடிகளும் கல்லடிகளும் காலித்தனங்களும் நடந்திருந்தாலும், பார்ப்பனரல்லாதார் போதுமான பிரசாரம் செய்யாததாலும், பார்ப்பனர்களின் சூழ்ச்சிகளைத் தைரியமாய் எடுத்துச் சொல்லாததாலும், பாமர ஜனங்கள் ஏமாந்து போக நேரிட்டதென்பதை நாம் ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும். இது போலவே வெளியிலும் அநேக இடங்களில் பார்ப்பனரல்லாதாருக்குப் பூரண வெற்றி கிடைத்துக் கொண்டு வருவதுடன் பார்ப்பனக் கட்சிக்கு சாவுக்குறியும் காணப்பட்டு வருகிறது.

பார்ப்பனர் கட்சிக்கு எங்கு வெற்றி ஏற்பட்ட போதிலும் அவைகளெல்லாம் பார்ப்பனர்களின் சூழ்ச்சியை பார்ப்பனரல்லாதார் தைரியமாய் எடுத்துச் சொல்லப் பின்வாங்கி நின்ற காரணங்களினாலும் பார்ப்பனர்களைப் போல் பார்ப்பனரல்லாதார் அனைவரும் ஒன்றுகூடி ஒற்றுமையாய் வேலை செய்ய முன்வராததாலுமே யல்லாமல் வேறல்ல. அல்லாமலும் பார்ப்பனர்களுக்குப் பிரசாரம் செய்வதற்கு மகந்துகளும் மடாதிபதிகளும் தாராளமாய்ப் பணம் கொடுப்பதாலும், கூலிக்கு உழைப்பதற்குப் பார்ப்பனரல்லாத வயிற்றுச்சோத்து பிரசாரகர்கள் எளிதில் கிடைப்பதனாலும் பார்ப்பனர் சூழ்ச்சி செல்வாக்குப் பெற இடமேற்பட்டு விடுகிறது. அதை எதிர்த்து நிற்க வேண்டுமானால் பார்ப்பனரல்லாதாரிலேயும் பார்ப்பனரல்லாதார்களும் பிரசாரத்திற்குப் பணமும் உண்மையான பிரசாரகர்களும் ஏற்பாடு செய்துதானாகவேண்டும்.

இவ்வொரு வருஷத்தில் பார்ப்பனரல்லாதார் கொஞ்சமாவது துணிந்து பார்ப்பனர்களின் சூழ்ச்சியை வெளியிட்டதன் பலனாலும் ஸ்ரீமான்கள் ஆரியா, தண்டபாணி பிள்ளை, சக்கரைச் செட்டியார், வரதராஜுலு நாயுடு, கலியாணசுந்தர முதலியார் போன்றவர்களுக்கு பார்ப்பனர்களின் சாவகாசத்தை விட்டும் காங்கிரசின் ஊழல்களை அறிந்து அவற்றின் நிர்வாகங்களிலிருந்து விலகவும் தைரியம் ஏற்பட்டதன் பலனாகவே பார்ப்பன சூழ்ச்சி தோல்வி அடைய சௌகரிய மேற்பட்டது. சென்னையிலாகட்டும் மற்றும் வெளியிடங்களிலாகட்டும் சட்டசபை முதலிய ஸ்தாபனங்களுக்கு அபேட்சகர்களாகக் கூட நிறுத்துவதற்கு ஆளில்லாமல் பார்ப்பனர்கள் திண்டாடவும் இவர்களை நம்பி ஏமாந்து இவர்கள் சார்பாய் அபேட்சகர்களாய் நின்ற இரண்டொருவர்களும் இப்பொழுது ஒவ்வொருவராய் விலகிக் கொண்டு போவதையும் பார்த்தால் இந்த பிரசாரங்கள் சென்ற வருஷத்திலேயே தொடங்கியும் இப்பொழுது விலகிய கனவான்களுக்கு சென்ற வருஷத்திலேயே விலகும்படியான தைரியம் இருந்தும் இருக்குமானால் இதுவரையில் பார்ப்பனர் சூழ்ச்சியும் அதன் பலனாய் ஏற்பட்ட காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சிகளும் மாண்டு ஒழிந்து போயிருக்குமென்பதுடன் மகாத்மாவின் ஒத்துழையாமைக் காங்கிரஸ் மறுபடியும் தொடங்கப்பட்டிருக்குமென்றே சொல்லலாம். மகாத்மாவின் காங்கிரஸ் தொலைவதற்கு அப்பார்ப்பனர்களே முக்கிய காரணஸ்தர்களென்று சொல்ல வேண்டுமானாலுங்கூட, அக்காரணங்களுக்கு மேற்சொன்ன பார்ப்பனரல்லாத தலைவர்களும் இதுவரை உதவியாயிருந்து வந்ததும் ஒரு காரணமென்பதையே நாம் வருத்தத்துடன் சொல்ல வேண்டியிருக்கிறது. இனியும் பார்ப்பன சூழ்ச்சியோ சுயராஜ்யக் கட்சியோ பார்ப்பன காங்கிரசோ ஒரு கடுகளவு நமது நாட்டில் ஒரு க்ஷணம் இருப்பதாக வைத்துக் கொண்டாலும் அது நமது பார்ப்பனரல்லாதாரின் சுய நலமும் சமூகத் துரோகமும் வயிற்றுப் பிழைப்பு தேசபக்தியுமே காரணமேயல்லாமல் வேறல்ல வென்பதை உறுதியாய்ச் சொல்லுவோம்.

தேவஸ்தான மசோதா.

பார்ப்பனரின் சூழ்ச்சி, "மித்திர"னின் அகம்பாவம்.

——:o:——

சென்ற புதன் வியாழக்கிழமைகளில் தேவஸ்தான மசோதாவைப் பற்றி பார்ப்பனமித்திரனாகிய "சுதேசமித்திரன்" பத்திரிகையில் 'அக்கிரமத்திற்கும் அளவில்லையா' என்கிற தலைப்பின் கீழ் சில விஷமத்தனமான வார்த்தைகளை எழுதியிருக்கிறது. அது எதைப் பற்றி என்றால் வரப்போகிற சென்னை சட்டசபைக் கூட்டத்தில் தேவஸ்தான சட்டத்தில் உள்ள சில சட்ட சம்பந்தமான சிறு தவறுதல்களைத் திருத்துவதற்காக ஒரு மசோதா சர்க்காரால் கொண்டு வரப்படப் போகிறது. ஏனெனில் அச்சிறு சட்ட சம்பந்தமான தவறுதல்களை ஆதாரமாக வைத்தே தேவஸ்தான மசோதாவை அடியோடு ஒழிப்பதாகச் சொல்லி நமது பார்ப்பனர்கள் மகந்துகளையும் மடாதிபதிகளையும் ஏமாற்றி அவர்களிடமிருந்து இலட்சக் கணக்கான பொருளைக் கவர்ந்து வியவகாரங்களை உண்டாக்கி நியாயஸ்தலங்களில் தற்காலத் தடை உத்திரவும் பெற்று இன்னும் பல மடாதிபதிகளை ஏமாற்றிப் பொருள் பறிக்கப் பிரயத்தனப்பட்டு வருகிறார்கள். இப்பொழுது சர்க்காரால் கொண்டுவரப்படப் போகும் மசோதா நிறைவேறி விடுமானால் இம்மாதிரி நமது பார்ப்பனர்கள் மடாதிபதிகளையும் மகந்துகளையும் ஏமாற்றிப் பொருள் பறிக்கவும் தற்காலத் தடை உத்திரவுகள் பெற்று தர்ம சொத்துக்களைக் கொள்ளையடிக்கவும் முடி-

யாமல் போய் விடுமாகையால் இது பற்றியே "சுதேசமித்திரன்" இம்மசோதாவைப் பற்றி அதிகப் பிரசங்கித்தனமாகவும் 'அக்கிரமத்திற்கும் அளவில்லையா' என்று தலையங்கமிட்டு என்னென்னமோ பிதற்றுகிறான்.

1. "1923-ம் வருஷத்தில் இம் மசோதா சட்டசபை அங்கத்தினர்களில் ஹிந்துக்கள் பலரால் எதிர்க்கப்பட்டும் ஹிந்துக்களல்லாதாரின் உதவியைக் கொண்டு நிறைவேற்றப்பட்டது" என்று எழுதுகிறான். இம் மசோதா சட்ட சபையில் நிறைவேறும் போது எதிர்த்த ஹிந்துக்களைவிட எதிர்க்காத ஹிந்துக்களே அதிகமாயிருந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். "மித்திரன்" அகராதியில் ஹிந்துக்களென்று சொன்னால் பார்ப்பனர்களும் பார்ப்பனர்கள் தாளத்திற்கு ஆடும் பார்ப்பனரல்லாதாரையும் தான் குறிக்கும் போலிருக்கிறது. பார்பனர்களுடைய அயோக்யத்தனத்தை யாராவது வெளியிலெடுத்துச் சொன்னாலாவது அவர்களுக்கு விரோதமாய் யாராவது நடந்துகொண்டாலாவது அவர்கள் இந்துக்கள் அல்லபோலும்.

2. அல்லாமலும் "ஆதிமசோதா கோர்ட்டில் வியவகாரத்திலிருக்கும் போது புது மசோதா வெளியிட அவசியமில்லை" என "சுதேசமித்திரன்" கூறுகின்றான். மசோதாவில் சட்ட சம்பந்தமான சில குற்றமிருந்ததன் பலனாய் கோர்ட்டில் மசோதாவைத் தள்ளி வைக்க வியவகாரம் தொடுத்திருந்ததாக வைத்துக்கொண்டாலும் இந்த சமயத்தில் மசோதாவின் குற்றத்தை நீக்குவதில் "மித்திர" னுக்கு நஷ்டமென்ன? மசோதாவின் குற்றம் நீங்கி கோர்ட்டிலுள்ள வழக்குகள்மேல் நடவடிக்கைகள் நடத்த வேண்டிய அவசியமில்லாமல் நின்றுவிட்டுப் போக வேண்டிய அவசியம் ஏற்படுமேயானால் தங்கள் ஜாதியாருக்கு பிழைப்பிடாமல் போய்விடுமே என்கிற பேராசைக் கெட்ட எண்ணமும் வரப்போகும் தேர்தல்களில் பிரசாரம் செய்வதற்காக மடாதிபதிகளிடம் தேவஸ்தான மசோதாவை ஒழிக்க சட்ட சபைக்கு ஆட்களை சேர்க்கிறோம், ஆட்களை சேர்க்கிறோம், என்று ஏமாற்றிப் பொருள் பறிக்க முடியாமல் போய்விடுமே என்கிற சின்னப் புத்திதானே அல்லவா?

3. தவிரவும் "பொது ஜன அபிப்பிராயம் தெளிவாக வெளிப்படப் போகும் சமயமான சட்ட சபைத் தேர்தலுக்கு முன் இம் மசோதாவை சட்டமாக்க முயலுவதால் பொது ஜன அபிப்பிராயத்தை மந்திரிகள் லட்சியம் செய்ய வில்லை" என்றும் "இந்த மந்திரிகளை ஒழித்தால் தான் ஜனங்களுடைய அபிப்பிராயத்திற்கு மதிப்பு ஏற்படும்" என்றும் கூறுகிறான். இது மகா அக்கிரமமான வாசகமென்றே நாம் சொல்லுவோம்.. இப்பொழுது சட்ட சபையிலுள்ள கனவான்களின் அபிப்பிராயம் பொதுஜன அபிப்பிராயம் அல்லவென்று "மித்திரன்" எப்படி சொல்லக் கூடும்? பொது ஜனங்களென்றால் யார்? "மித்திர" னுடைய இவ்வார்த்தையானது பொது ஜனங்களையே அவமானப் படுத்தத் தக்கதாயிருக்கிறது. பார்ப்பனர் தவிர பார்ப்பனர் பெரும்பான்மையாயிருக்கிற சபைகள் தவிர மற்ற சபை பொது ஜன சபை அல்லவென்றும் பொது ஜன அபிப்பிராயமல்ல என்றும் "மித்திரன்" கருதுவானேயானால் இப்பார்ப்பனர்களும் "மித்திர" னும் பொது ஜனங்கள் அல்லவென்று நாம் நிரூபித்தாலொழிய நமது நாடு முன்னுக்கு வாரதென்றுதான் நாம் சொல்லுவோம். இப்பார்ப்பனர்கள் தாங்கள் எந்த முறையில் சட்ட சபையில் போயிருந்து கொண்டு பொது ஜனப் பிரதிநிதி என்று சொல்லிக் கொள்ளுகிறார்களோ அதே முறையில் சட்ட சபைக்குச் சென்ற பார்ப்பனரல்லாதாரும் தாங்களும் பொது ஜனங்களின் பிரதிநிதி என்று சொல்லிக் கொள்வதற்கு உரிமை பெற்றவர்கள் என்ற அறிவு "மித்திர" னுக்கு ஏன் இல்லாமல் போய்விட்டது? இம்மாதிரி ஒரு சமூகத்தையும் சமூகப் பிரதிநிதிகளையும் கேவலமாகவும் அவமானமாகவும் மனம் புண் படும்படியாகவும் எழுதக்கூடிய ஆணவத்தை என்றைக்கு நாம் அழிக்கிறோமோ அன்றுதான் நாட்டிற்கு க்ஷேமமுண்டாகும். அதில்லாமல் இவைகளை இப்படியே அதிகப் பிரசங்கித்தனமாக நடக்கவிட்டுக் கொண்டிருக்கும் வரையில், கோயில் சொத்தைத் தின்னுகிறவர்களும், மகந்து மடாதிபதிகளுக்கும் தாசி வேசிகளுக்கும் இடையில் தூது நடக்கிறவர்களும் வழக்குகள் பெயரால் தர்மச் சொத்தைக் கொள்ளை யடிக்கிறவர்களும், பாமர ஜனங்களை ஏமாற்றி வயிறு வளர்க்கிறவர்களும் தேசத்திற்கோ மதத்திற்கோ கொஞ்சமும் பொறுப்பற்ற சுய நலப் பிணங்களுந்தான் நமது நாட்டுப் பொது ஜனங்களாகக் கருதப் படுவார்களென்றே நாம் பயப்படுகிறோம்.

அடுத்தாப்போல் சட்ட சபையில் தேவஸ்தான மசோதா வரும்போது சட்ட சபையை விட்டு வெளியில் வந்து விட்டோமென்று சொன்ன பார்ப்பன சுயராஜ்யக் கட்சி "வீரர்கள்" மீண்டும் சட்ட சபைக்கு வருவார்களா வரமாட்டார்களா என்பதும் தேவஸ்தான மசோதா விஷயம் சுயராஜ்யக் கட்சிக்கு சம்பந்தப் பட்டதா தனித் தனி நபர் சம்பந்தப்பட்டதா என்பதும், தனித் தனி நபர் சம்பந்தப்பட்டதானால் கட்சித் தலைவரின் உத்திரவில்லாமலே சட்ட சபைக்குப் போகலாமா என்பதும் அறிய வெகு ஜனங்கள் இச்சமயம் ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

பம்பாயில் பார்ப்பனர் கொடுமை.

மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா என்பது ஓர் பழமொழி. அத்தகைத்தே நமது பார்ப்பனர்களின் தன்மையாகும். பல நூறு ஆயிர ஆண்டுகளாக பார்ப்பனரல்லாத பெருங்குடி மக்களை, தூர்த்தர்களான பார்ப்பனர்கள் தங்களின் வயிற்றுப் பிழைப்பைக் கருதி உண்டாக்கிய சாஸ்திரங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு, அட்டைபோல் உறிஞ்சி வந்தனர்-வருகின்றனர். எத்தகைய கேவலத் தொழிலையும் செய்யப் பின் வாங்காத இழிதகைமை படைத்த இப்பார்ப்பனக் கூட்டம் இந்துக்களின், அதாவது பார்ப்பனரல்லாதாரின் மதகுருவென்றும் சுபாசுப காரியங்களை நடத்தி வைக்கும் புரோகிதர்களென்றும் மக்களை ஏமாற்றி ஆதிக்கஞ் செலுத்தி வந்தனர்-வருகின்றனர். இவர்களின் பஞ்சதந்திரக் கொடுந்தன்மைகளை பார்ப்பனரல்லாதார் அறியவே சுபாசுப காரியங்களில் இவர்களை விலக்கவேண்டுமென்ற பரபரப்பும் துடிதுடிப்பும் அதிவேகமாக நாடெங்கும் பரவி வருகிறது.

சென்னை மாகாணத்திலே பார்ப்பனரல்லாதார் இயக்கம் தோன்றிய பின்னால் இந்த சமூகத்தாருள் எவ்வளவோ பல சமூக சீர் திருத்தங்களும் மாறுதல்களும் நடந்து வருகின்றன. அவற்றுள் பார்ப்பனரல்லாதார்கள் சுபா சுப காரியங்களுக்கு பார்ப்பனர்களைப்புரோகிதர்களாகத் தருவிக்காது தங்கள் சமூகப் பெரியோர்களைக் கொண்டே நடத்திவர முற்பட்டுவிட்டமை ஒன்றாகும். சென்னை மாகாணத்தில் இந்துக்கள் ஒவ்வொரு கிரிகைகளுக்கும் பார்ப்பனர்களை வைத்தே அதை நடத்தவேண்டுமென்றவிதி சட்டமூலமாகக் கிடையாது. அவரவர்கள் விருப்பப்படி யாரை வேண்டுமானாலும் வைத்துக்கொண்டு நடத்திக்கொள்ளலாமென்றுஇருப்பதால் மேற்கூறிய காரியங்கள் எளிதிலே நடாத்தற்கு இலகுவாகிறது. ஆனால் பம்பாய் மாகாணத்திலோ அப்படியில்லை. பம்பாய் பார்ப்பனரல்லாதார் தங்கள் சுபாசுப காரியங்களுக்குப் பார்ப்பனப் புரோகிதர்களை அழைத்தாலும் அழைக்காவிட்டாலும் அவர்களுக்கு தட்சணை என்னும் கட்டாயப் பிச்சை கொடுத்தே தீரவேண்டுமென்று சட்ட வாயிலாக ஏற்பட்டிருக்கிறது. சென்னையிலே தோன்றிய பார்ப்பனரல்லாதாரியக்கம் இந்தியா வெங்கும் பரவி வருகின்றமையான் ஆங்காங்குள்ள பார்ப்பனரல்லாதார் தங்கள் தங்கள் சுயமரியாதையைக் காப்பாற்ற முனைந்து வருகின்றனர். பம்பாய் மாகாணத்திலே உள்ள அந்த கய கொடிய சட்டத்தை அறவே ஒழிப்பான் வேண்டி சின்னாட்களுக்கு முன் கூடிய பம்பாய் சட்ட சபைக் கூட்டத்தில் பார்ப்பனரல்லாதாரின் தலைவர்களுள் ஒருவரான திரு. எஸ். கே. போலே என்பார் ஓர் திருத்த மசோதா கொண்டு வந்தார். ஒவ்வொரு மனிதரும் தத்தம் மனச்சாக்ஷிப்படியும் விருப்பப்படியும் மத அனுஷ்டானங்களை நடத்த உரிமையிருக்க வேண்டுமென்பதே இம் மசோதாவின் முக்கிய கருத்து.

திரு. எஸ். கே. போலே அவர்களின் திருத்த மசோதாவை எதிர்ப்பதற்கென்றே சுயராஜ்யக் கட்சி சட்ட சபை அங்கத்தினர்கள் அக்கூட்டத்திற்கு வந்திருந்ததாக "சுதேசமித்திரன்" நிருபர் எழுதியிருக்கிறார். சுயராஜ்யக் கட்சியினரென்பது யார்? என்றும், அவர்கள் நாட்டிற்கு எத்தகைய ராஜ்யம் வேண்டுமென்கிறார்கள்? என்பதும் இவற்றினின்று நன்கு அறிந்து கொள்ளலாம். அதாவது சுயராஜ்யக் கட்சியார் பார்ப்பனக் கட்சியே யென்பதும் அக்கட்சியார் கோருவது பார்ப்பன ராஜ்யமே யென்பதும் இவற்றினின்று தெள்ளிதிற்புலனாகும் என்பதே. திரு. போலே அவர்களின் திருத்த மசோதா சுயராஜ்யக் கட்சியினரால் மிகுந்த பலத்தோடு தாக்கப் பட்டதாகத் தெரிகி

றோம். அக்கட்சியார் புரோகிதர்கள் சார்பாய் வாதாடும் போழ்து அத்திருத்த மசோதா போல்ஷிக் கொள்கை உடையதாயிருக்கிறதென்றும் பிராமண துவேஷத்தை வளர்க்கக்கூடியதென்றும் கூறி அம்மசோதாவைத் தனிக் கமிட்டிக்கு அனுப்புமாறும் வாதம் நிகழ்த்துவதானால் அடுத்த கூட்டத்திற்கு ஒத்தி வைக்குமாறும் பல திருத்தங்களும் மாற்றங்களும் கொண்டுவரப்பட்டன. எவ்வளவோ சூழ்ச்சி செய்தும் சுயராஜ்யக் கட்சியினரின் திருத்தத்தின்மேல் வந்த திருத்தங்கள் முற்றும் தோற்கடிக்கப்பட்டன.

இவ்வாறு புரோகிதர் கட்சி வீழ்ச்சிபெறுவதைக் கண்ட டாக்டர் பரஞ்சப்பே அவ்விரு கட்சிக்கும் ஒரு ராஜிசெய்ய முயன்றார். இவரது ராஜியின் தோரணையைக் கவனித்தால் பூனைகள் திருடிக்கொண்டு வந்த அப்பத்தைப் பங்கிடப்புகுந்த குரங்கின் கதையாகவேயிருக்கிறது. ஏனென்றால் சாதி அபிமானம் சந்நியாசிக்கும் போகாது என்பது போல டாக்டர் பரஞ்சப்பே பார்ப்பனரானதால் அவர் தம் இனத்தவராய பார்ப்பனப் புரோகிதர்களின் சார்பிலேயே பஞ்சாயம் செய்தார். அதாவது பரம்பரையாக இருந்து வந்த பாத்தியதையை இழக்க நேரும் புரோகிதர்களுக்கு ஒருவகை நஷ்டஈடு கொடுத்து விடுமாறும், சிவிலியன்கள் சீர்திருத்தம் வழங்கப்பட்டவுடன், வீதாசாரப் பென்ஷன், பரிகாரம் முதலியவற்றிற்காகப் பிரமாதக் கிளர்ச்சி செய்ததை கவர்ன்மெண்டின் ஞாபகப்படுத்துக் கொண்டு வருவதாகவும், அதே போல் ஆயிரக் கணக்கான வருஷங்கள் அநுபவித்து வந்த பாத்தியதைகளைப் புரோகிதர்கள் இழப்பதற்குப் பரிகாரமளிக்க வேண்டாமா என்றும் பேசியிருக்கிறார். மற்றொருவர் புரோகிதரைக் கூப்பிட விரும்பாதவர்கள் அனைவரும் அதற்குப் பதிலாக தடவை ஒன்றுக்கு ரூபாய் ஒன்று விதம் கொடுக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார். கல்வி மந்திரி கனம் யாதவ் டாக்டர் பரஞ்சப்பே அவர்கள் பேசியதை எதிர்த்து "மசோதாவின் உத்தேசம் கிராம ஜனங்களுக்குப் பூரா விடுதலை யளிப்பதாகையால் நஷ்டயீடு அளிப்பது அநந்தத் தீய முறையை இன்னும் நீடிக்கச் செய்வதாகும்" என்று அழுத்தமாகப் பேசியிருக்கிறார்.

பார்ப்பனரல்லாதாரிடம் புரோகிதர்கள் நஷ்ட ஈடு கேட்பதற்கு எத்தகைய உரிமை உண்டு என நமக்கு விளங்கவில்லை. இவர்கள் பார்ப்பனரல்லாதாரின் பின் வழித்தோன்றிய சந்ததியாரா? பார்ப்பனரல்லாதாரின் வாழ்வை அழியாது நிலை நிறுத்திய வீரர்களா? எனக் கடாவுகின்றோம். பார்ப்பனர்களின் எதிர்ப்பைத் தாக்கிய திரு. நூர்வே "பார்ப்பனப் புரோகிதர்கள் ஜனங்களுடைய விருப்பப்படி சடங்குகளை நடத்தி வைக்காததால் தான் மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது" என்று கூறியதிலிருந்து அப் புரோகிதர்களே கிரிகைகளை நடத்தி வைக்கவும் அவற்றிற்கு கௌரவப் பிச்சை பெறவும் எவ்வாறு உரிமை உடையார் என்பதை வாசகர்கள் அறிந்துகொள்ளலாம்.

முதற்கண் மேற்கண்ட கிரிகைகள் எதற்காக என்ன பலனைக் கருதி, பார்ப்பனர்களைக் கொண்டும் அக்காரியங்கள் நடத்தி வைக்க வேண்டுமென்பது நமக்குத் தெரியவில்லை. வயிற்றுப் பிழைப்பிற்காக ஒரு கூட்டத்தார் செய்த அக்கிரமத்திற்குப் பார்ப்பனரல்லாத சமூகம் நஷ்டயீடு கொடுக்க வேண்டுமாம். இவ்வரசாங்கம் பார்ப்பனர்களுடையதாயிருக்குமேயாகில் புரோகிதர்களை விலக்கும் பார்ப்பனரல்லாதாரை, ஸார் சக்கிரவர்த்தியின் தலையை வாங்கியதைப் போன்றே அப்பார்ப்பனரல்லாதாரின் தலையை வாங்கும்படி தீர்மானம் செய்வார்களென்பதில் சந்தேகமில்லை.

ஜனங்களுடைய விருப்பப்படியும் கிரிகை செய்வதில்லை, இதற்கு புரோகிதர்களை வேண்டாமென்று நிறுத்தினாலும் அதற்குத் தண்டவரி கொடுக்க வேண்டுமென்றால் இந்த அக்கிரமத்திற்கு எங்கு போய் முறையிடுவது? இவற்றினின்று சுயராஜ்யக்கட்சி பார்ப்பனக் கட்சி என்பதையும் அக்கட்சி பாடுபடுவதனைத்தும் பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்தவே என்பதையும் நமது வாசகர்கள் உணர்ந்து கொள்வார்களென்று நம்புகிறோம்.

பார்ப்பனரல்லாதார் பார்ப்பனர்களை நம்பியிருந்த காலத்தில் பார்ப்பனர்கள் பம்பாய் அரசாங்கத்தில் புகுந்து தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டி புரோகிதர்களை அழைத்தாலும் அழைக்காவிட்டாலும் அவர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டுமென்ற இவ்வித சட்டத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். இப்பொழுது பார்ப்பனரல்லாதார் விழித்துக் கொண்டு தங்கள் சுய மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள முன் வந்தது போற்றத் தக்கதாகும். இவர்களது முயற்சி வெற்றி பெறுமென்று திரு. போலேயின் மசோதாவின் பேரில் நடை பெறும் விவாதத்திலிருந்து அறிகிறோம். அவர்களது முயற்சியை நாம் போற்றுகிறோம்.

இரு பார்ப்பன சீனிவாசர்களின் பொய்மான் அறிக்கை.

இதை மண்டையில் அடித்துப் புதைக்கவேண்டும்.

ஸ்ரீமான்கள் மகாகனம் சீனிவாச சாஸ்திரியும், எஸ். சீனிவாசய்யங்காரும் கூடியாலோசனை செய்து ஒரு பொய்மான் அறிக்கை வெளியிடச் செய்திருக்கிறார்கள். இப்பொய்மான் அறிக்கையைக் கண்டு பொது ஜனங்கள் ஏமாந்து போகக் கூடாது. அவ்வறிக்கையை ஒரே அடியாய் மண்டையில் அடித்துக் கொன்று குழியில் புதைக்க வேண்டும். அது எதுவென்றால் அதுதான் இந்திய தேசிய ஐக்கியச் சங்கம் என்பது இதை உண்டாக்க நேரு-ஆசாத் அறிக்கை என்பதாக ஒன்றைக் கட்டி விட்டிருக்கிறார்கள். உஷார்! உஷார்!! உஷார்!!!

திரு. சீனிவாசய்யங்காருக்குப் போட்டி.

சென்னை நகர இந்தியா சட்ட சபை ஸ்தானத்திற்கு அபேக்ஷகராக நிற்கும் திரு. எஸ். சீனிவாசய்யங்காருக்குப் போட்டியாக திரு. வி. சங்கரைச் செட்டியார் ஒரு அபேக்ஷகராய் நிற்கிறார்.

பண்டித மாளவியாவின் புது தைரியம்.

—:0:—

இப்போது சட்டத்தை மீறுவது தேசத்தைக் கருதியா? வகுப்பைக் கருதியா?

ஒத்துழையாமையின்போது சர்க்காரால் போடப்பட்ட எத்தனையோ இலட்சக் கணக்கான அநாகரீகமானதும் அநியாயமானதுமான உத்திரவுகளை இந்திய மக்களில் பதினாயிரக் கணக்கான பேர் மீறி ஜெயிலுக்குப் போய்க்கொண்டிருந்த காலத்தில் இவைகளில் ஒன்றாவது நமது பண்டித மாளவியாவுக்கு அநியாயமான உத்திரவென்றோ அநாகரீகமான உத்திரவென்றோ தோன்றாமல் போய்விட்டது. ஏன்? அது தேச நன்மைக்கும், இந்திய மக்களின் சுயமரியாதைக்கும் பஞ்சாப்புக்கும் கிலாபத்துக்கும் ஏற்பட்ட அநீதிக்கும் பரிகாரம் தேட ஏற்பட்ட வழிகளைத் தடைப்படுத்த ஏற்பட்ட உத்திரவானதால் அதைப்பற்றி நமது பண்டிதருக்கு லட்சியமில்லை. ஆனால் இப்பொழுது கல்கத்தா கலவா சம்பந்தமாய் உண்மையாய் கொலைகளும், கொள்ளைகளும் அடிதடி கலவரங்களும் இரு பக்கமும் நடந்துகொண்டிருக்கிற காலத்தில் வங்காள அரசாங்கத்தார் போட்ட தடை உத்திரவை மீறுவதற்கு நமது பண்டிதருக்கு வெகு அவசரம் ஏற்பட்டுவிட்டது. ஏனென்றால் இந்த உத்திரவானது வெறும் வகுப்பு சம்பந்தத்தையே ஆதாரமாகக் கொண்டிருப்பதால்தான். ஆனதால் நமது பண்டிதர் வகுப்புவாதியா தேசியவாதியா என்பதை வாசகர்களே உணர்ந்து கொள்ளலாம். பண்டிதர் பார்ப்பனராயிருப்பதால் அவர் செய்யும் காரியங்களும் கிளர்ச்சிகளும் இந்து சமூகத்திற்கு என்கிற பெயரை வைத்துக்கொண்டு பார்ப்பன சமூகத்திற்கும் வர்ணாசிரமத்திற்கும் ஆதரவளிக்கச் செய்வதாயிருப்பதால் நமது நாட்டுப்பார்ப்பனப் பத்திரிகைகளும் பார்ப்பனத் தலைவர்களும் பண்டிதரின் நடவடிக்கையை வகுப்புத்தொண்டு என்று சொல்லாமல் தேசியத்தொண்டு என்று சொல்லி பண்டிதரை பெரிய தேசபக்தராக்க விளம்பரம் செய்வார்கள்.

வங்காள உத்திரவை யோக்கியமான உத்திரவென்று நாம் சொல்லா விட்டாலும் பண்டிதர் பெற்ற பிள்ளையாய இந்து மகா சபை பிறந்திருக்காவிட்டால் இந்தியாவில் இந்து முஸ்லிம் கலகமும் மகாத்மாவின் ஒத்துழையாமைக்கு சாவும் ஏற்பட்டிருக்காதென்றே நெருப்பின் மீது நின்று கூறுவோம்.

திரு. நாயக்கர்.

திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் வயிற்றுப் போக்காலும் கைவலியினாலும் நலிவுற்றிருப்பதால் குறைந்த பக்ஷம் இது முதல் 10-நாளைக்காவது வெளியிடங்களுக்குப் போக இயலாதிருக்கிற தென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். திரு. நாயக்கர் அவர்களை பல மகாநாடுகளுக்கும் பிரசங்கங்களுக்கும் வருமாறு பல அன்பர்கள் அழைக்கின்றமையால் அவற்றிற்கு திரு. நாயக்கர் போகத்தக இயலாதிருக்கிறதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நீதி நிர்வாகத்தில் வகுப்பு உணர்ச்சி.

மதுரை முனிசிபல் சேர்மென் தேர்தல்.

மதுரை முனிசிபாலிட்டிக்குச் சேர்மெனைப் பொது ஜனங்களாலும் இயற்கை தேவியாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்ரீமான் ஆர். எஸ். நாயுடுவை நமது பார்ப்பன தேவதைகள் ஐந்து ஆறு மாதகாலமாக அந்த ஸ்தானத்தில் உட்காருவதற்கில்லாமல் செய்து விட்டார்கள். அது என்னவென்றால் ஸ்ரீமான் ஆர். எஸ். நாயுடுவும் மற்றொரு கனவானும் சேர்மென் பதவிக்குப் போட்டியாக நின்றார்கள். ஸ்ரீமான் நாயுடு பார்ப்பனர்களின் எடுப்பார் கைக்குழந்தையாயில்லாமல் சுயமரியாதை உள்ளவராயிருந்து விட்டபடியினால் அங்குள்ள பார்ப்பனர்கள் நாயுடுவுக்கு விரோதமாக ஒருவரை நிறுத்தி சுயராஜ்யக் கட்சியின் பெயராலும் காங்கிரஸ் பெயராலும் எவ்வளவோ சூழ்ச்சிகள் செய்தும் ஸ்ரீமான் நாயுடுவுக்கு சம ஓட்டு கிடைத்ததால் திருவுளச்சீட்டு போடவேண்டிய அவசியம் ஏற்பட்டு, திருவுளச்சீட்டிலேயும் ஸ்ரீமான் நாயுடுவுக்கே ஆகிவிட்டது. இதைப்பொறுக்காத பார்ப்பனர்கள் ஒரு பார்ப்பனரை நியாயாதிபதியாய் அடைந்திருக்கிறோமென்ற தைரியத்தின் பேரில் கோர்ட்டுக்குப் போய் அத் தேர்தலை ரத்து செய்து வேறு தேர்தல் செய்யும்படி தீர்ப்புப் பெற்றுவிட்டார்கள். நல்லவேளையாய் பார்ப்பனரல்லாதார் அப்பீல் நியாயாதிபதியாய் இருக்கும்படியான ஒரு நியாயஸ்தலம் நமது நாயுடுவுக்குக் கிடைத்தபடியினால், அங்கு நாயுடு அப்பீல் செய்து கொண்டதன் பலனாய் அந்த பார்ப்பன நியாயாதிபதியின் உத்திரவு மாற்றப்பட்டு பொது ஜனங்கள் இஷ்டப்பிரகாரமும் இயற்கை தேவியின் ஆசீர்வாதத்தாலும் ஸ்ரீமான் நாயுடுவே சேர்மென் வேலைபார்க்கும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டது. எவ்வளவு தான் சட்டங்களுக்கும் தேசத்தின் மானத்திற்கும்பயந்து கொண்டு விஷயங்களைச் சகித்துச் சகித்துப் பார்த்தாலும் வகுப்புணர்ச்சிகளின் பலனை ஒரு வகுப்பாருக்கு மற்றொரு வகுப்பார் செய்யும் கெடுதியை மறைக்க முடிவதில்லை. சுருக்கமாய்ச் சொல்லுவதானால், நமது நாட்டில் வெள்ளைக்காரர்களுக்கும் கருப்பு மனிதர்களுக்கும் ஏற்படும் வகுப்பு வியவகாரங்களில் வெள்ளைக்கார நியாயாதிபதிகளிடமிருந்து பெரும்பாலும் கருப்பு மனிதர்கள் நியாயம் பெற முடியாத நிலைமையில் இருக்கிறார்களோ அது போலவே பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கிற உணர்ச்சியின் பேரில் ஏற்படும் வியவகாரங்களில் பார்ப்பனர்களிடமிருந்து பார்ப்பனரல்லாதார் நியாயம் பெற முடியாமலிருப்பதோடு கஷ்டமும் நஷ்டமும் அடைய வேண்டியதாயிருக்கிறதை இது சமயம் நாம் சொல்லித்தீர வேண்டியதாயிருக்கிறது.

நமது கொஞ்ச கால ராஜீய அனுபவத்தில் பார்ப்பனரல்லாத வக்கீல்கள் பார்ப்பன நியாயாதிபதிகளிடத்தில் அடையும் இழிவும் கொடுமையும் பாரபக்ஷமும் சுய மரியாதை உள்ளவர்களென்போர் வெளியில் சொல்லிக் கொள்ள முடியாததாயிருப்பதை அனுபவத்தில் பார்த்து வருகிறோம்.

இவ்வித வித்தியாசங்களுக்கு ஒரு சிறிய போலீஸ் அதிகாரிமுதல் உயர்தர நீதி மன்றம் வரையில் ஆளாக வேண்டியதாகவேயிருந்து விடுகிறது. இதற்கு உதாரணங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால் இதிலிருந்து நமது மக்கள் எப்படித் தப்புவது என்பதுதான் நமக்குப் பெருத்த கவலையாயிருந்து வருகிறது. ஒரு வகுப்பாருக்கு மாத்திரந்தான் இப்போது இந்தக்கஷ்டமிருக்கிறதென்று நாம் இங்கு சொல்ல வரவில்லை. தேர்தல் வியவகாரங்கள் நூற்றுக்கு 90 குறைவில்லாமல் அப்பீலில் மாறியிருப்பதின் சம்பவமென்ன? ஏறக்குறைய தற்காலம் நமது நாட்டில் நடக்கும் தேர்தல் வியவகாரங்களெல்லாம் வகுப்புணர்ச்சியை ஆதாரமாக வைத்தே நடத்தப்பட்டு வருகின்றன. அந்த வகுப்பு உணர்ச்சிகள்தான் இவ்விதத் தீர்ப்புகளுக்கும் ஆதாரமென்றே நாம் நம்ப வேண்டியிருக்கிறது. இதிலிருந்து நாம் என்ன முடிவுக்கு வரவேண்டியதிருக்கிறதென்றால் தேர்தல் சம்பந்தமான வியவகாரங்களை நீதிபதிகள் கைக்குக் கொண்டு போகாமல் நிர்வாக அதிகாரிகள் கையிலேயேயிருக்கச் செய்தால் ஒழுங்காயிருக்க முடியுமா என்று கூட நினைக்க வேண்டியதாயிருக்கிறது. நிர்வாக அதிகாரிகள் செய்யும் கொடுமைகள் நீதிபதிகள் செய்யும் கொடுமைகளை விடக்குறைந்தல்ல வானாலும் (உதாரணமாக ஈரோடு முனிசிபல் நிர்வாக ஊழல்களைப்பற்றி மேல் நிர்வாகிகள் நடந்துகொள்ளும் தோரணையிலிருந்து தெரிந்துகொள்ளலாம்) இவ்வளவு காலதாமதமும் பணச்செலவும் மனக்கேடும் வக்கீல்கள் சூழ்ச்சியும் குறையுமென்றே நம்புகிறோம்.

பிராமணீயத்தை ஒழித்தவர்கள்.

சென்னையில் கொஞ்சநாளைக்கு முன்பு ஸ்ரீமான்கள் டாக்டர் வரதராஜுலு நாயுடுகாரு, ஆர். கே. ஷண்முகஞ் செட்டியார், திரு. வி. கலியாணசுந்தர முதலியார், ந. தண்டபாணி பிள்ளை, ஈ. வெ. இராமசாமி நாயக்கர், முதலியவர்கள் கூடிப் பேசியதாகவும், அதன் முடிவு என்ன என்பதைப்பற்றியும் முந்திய இதழில் எழுதியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்

அதாவது அரசியல் விஷயத்தைப்பற்றி அவரவர்கள் அபிப்பிராயப்படி நடந்துகொள்வதென்றும், சமூக சமத்துவ விஷயங்களில் எல்லோரும் ஒரே அபிப்பிராயமாயிருக்கிறோம் என்றும் அது விஷயத்தில் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது என்றும் எழுதியிருந்தோம். அதன் பலனாக அதே சமயத்தில் சமூக சமத்துவ விஷயமாய் எல்லோரும் ஒத்துப் பிரசாரம் ஆரம்பிக்கப்படும் முன்பு பார்ப்பனரல்லாதார் வைதீகச் சடங்குகள் என்று பெயர் வைத்துக்கொண்டு ஒவ்வொரு குடும்பங்களிலும் பார்ப்பனர்களைக்கொண்டு செய்யப்படும் சடங்குகளை நிறுத்துவதற்கு முதல் முதலாகப் பிரசாரம் செய்யவேண்டுமென்றும் அப்படிச் செய்வதில் தங்கள் தங்கள் பெற்றோர்களைப் மற்றோர்களையும் மோக்ஷத்திற்கனுப்புவதென்றும், அவர்கள் சுகமாயிருப்பதற்கென்றும் பார்ப்பனர்களைக் கொண்டு திதி, திவசம் என்றோ சிராத்தம் என்றோ சொல்லும்படியான பல வைதீகச் சடங்குகள் செய்வதில் ஒன்றும் பலன் இல்லையென்றும், அம்மாதிரி சடங்குகள் பார்ப்பனர்களின் பிழைப்புக்கு ஏற்படுத்திக்கொண்டதல்லாமல் வேறல்ல என்பதைப் பார்ப்பனரல்லாதாருக்குத் தெரிவிப்பதற்காக ஒரு பிரசாரம் ஆரம்பிப்பதென்றும், அதில் அப்பொழுதிருந்து பேசிய ஐவரும் மற்றும் அதற்கு சம்மதித்தவர்கள் பெயரையும் வெளியிட்டு வருவதென்றும் முடிவு செய்து அதன்படியே சென்ற வாரத் 'தமிழ் நாடு' பத்திரிகையிலும் "பிராமணீயத்தை ஒழித்தவர்கள்" என்ற தலைப்பின் கீழ் பல கனவான்களின் பெயர் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இன்னமும் தெரியப்படுத்தும் கனவான்கள் பெயரும் அவ்வப்போது வெளிப்படுத்திக் கொண்டுவரப்படும். அதாவது, யார் ஒருவர் பார்ப்பனரைக் கொண்டானாலும் மற்றப்படியானாலும் தாங்கள் செய்யும் திதியோ, திவசமோ, சிராத்தமோ அல்லது வேறு பல சடங்குகளால் இறந்துபோன தங்கள் பெற்றோர்களுக்கோ, மற்றோர்களுக்கோ "மேலுலகத்திற்கு"ப் போய்ச்சேரும் என்று நினைத்துக்கொண்டு ஒன்றும் செய்வதில்லை, அவ்விதச் சடங்குகளில் நம்பிக்கையில்லை என்று யாருக்கு ஏற்படுகிறதோ அவர்கள் தங்கள் பெயரைத் தெரியப்படுத்தினால் பத்திரிகையில் பிரசுரித்து வரப்பெறும்.

மேற்கூறிய பிரகாரம் பிராமணீயத்தை விரட்டியவர்களாவன:— ஸ்ரீமான்கள்

1. டாக்டர் வரதராஜுலு நாயுடு, 'அசோக விலாஸ்' சேலம்.
2. திரு. வி. கலியாணசுந்திர முதலியார், 'நவ சக்தி' ஆசிரியர், சென்னை.
3. ஈ. வெ. இராமசாமி நாயக்கர், 'குடி அரசு' ஆசிரியர், ஈரோடு.
4. ஆர். கே. ஷண்முகஞ் செட்டியார், 'ஹவார்டன்', கோயமுத்தூர்.
5. சனக சங்கர கண்ணப்பர், 'திராவிடன்' ஆசிரியர், சென்னை.
6. என். தண்டபாணி பிள்ளை, 6–99 பவழக்கார தெருவு சென்னை.
7. ச. சொக்கலிங்கம் பிள்ளை, 'தமிழ் நாடு' துணை ஆசிரியர், சென்னை.
8. வெ. சுப்பையா பத்தர், 84 முகல் வீதி, ரங்கூன்.
9. திரு. அ. மு. அ. அண்ணாமலை செட்டியார், ஆத்தங்குடி.
10. எம். என். முத்துக்குமாரசாமி பாவலர், பரோபகார சங்கத் தலைவர், மேல்பாதி, நெல்லிக்குப்பம்.
11. எஸ். இராமநாதன், காரியதரிசி, தமிழ் மாகாண அ. பா. சர்க்கா சங்கம், ஈரோடு.
12. சா. இராமசாமி நாயக்கர், வியாபாரம், ஈரோடு.
13. ஓ. சி. முத்துசாமிக் கவுண்டர், வியாபாரம், ஈரோடு.
14. மணவை ரெ. திருமலைசாமி, 'குடி அரசு' துணை ஆசிரியன், ஈரோடு.

ஸ்ரீமான் வி. மகாலிங்கய்யருக்கு ஓர் பகிரங்கக் கடிதம்.

ஸ்ரீமான் ஐயர் அவர்களே!

"சென்ற "குடி அரசு" இதழில் 'ஆகஸ்டு மாத ஆபத்து' என்ற தலைப்பின் கீழ் பிராமணர்களுக்கு கொஞ்சம் அகம்பாவமிருப்பதாகவும் அந்த அகம்பாவத்திற்குத் தங்கள் வம்சத்தார் ஆகஸ்டு மாதம் கள்ளுக்கடை ஏலம் எடுக்காமலிருப்பதே மன்னிப்பு போலவும், வைக்கம் வீரர் திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்கள் பேரர் தொடங்கிய "சுய மரியாதைக் கொடி" கள், சாராயக்கடைகளில்தான் நாட்ட வேண்டுமென்பது போல் எழுதியிருக்கிறீர்கள். உங்கள் குலத்தாருக்கு இருக்கும் அகம்பாவத்திற்கு நீங்கள் கேட்கும் மன்னிப்பு மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவது போலிருக்கிறது. அக்கிரகாரத் தெருவில் சில வகுப்பார்களை நடக்கக் கூடாதென்று தடை செய்கிற அகம்பாவத்திற்கும், காபி, சாப்பாட்டு ஹோட்டல்களில் உங்கள்வம்சத்தாருக்கு என்று பிரத்தியேகமாக இடம் வைத்துக் கொள்ளுகிற அகம்பாவத்திற்கும், தண்ணீர் பந்தல்களிலும், ரயில்வே ஸ்டேஷன்களிலும் பிராமணரல்லாத சில வகுப்பினர்களுக்கு பாத்திரத்தில் தண்ணீர் கொடுக்காமல் கையில் ஊற்றுகிற அகம்பாவத்திற்கும், கோவில்களில் பிராமணர்களுக்கு மட்டும் மூலவிக்கிரகம் வரையில் செல்ல உரிமை வைத்துக் கொள்ளுகிற அகம்பாவத்திற்கும் இது மன்னிப்போ! உங்களைப்போன்றவர்கள் ஐரோப்பாவில் நடந்த வெர்சியல்ஸ் சமாதான உடன்படிக்கைக்கு ஜெர்மன் பிரதிநிதிகளாக சென்றிருந்தால் ஜெர்மனியர்களுக்கு நாடு இழக்கவும், நஷ்ட யீடு கடன் முதலிய வகைகளில்லாமல செய்திருப்பீர்கள்! தமிழ் நாட்டில் உங்களைப்போன்ற பிராமணர்கள் இருக்கும் வரை பிராமணர்களுக்கும் பிராமணரல்லாதாருக்கும் சமாதானம், சமத்துவம், ஒற்றுமை ஏற்படாது. திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் தொடங்கிய "சுய மரியாதை" என்ற சமத்துவ போர்கள் சாராயக்கடைகளிலில்லை. காபி கிளப்புகளிலும், சாப்பாட்டு ஓட்டல்களிலும், ரயில்வே சிற்றுண்டி உண்ணும் வண்டியிலும், சத்திரங்களிலும், தண்ணீர் பந்தல்களிலும், அக்கிரகாரங்களிலும், ஆறு, குளம், குட்டை, கிணறுகளிலும்,பள்ளிக்கூடங்களிலும் "சுய மரியாதை" என்ற சமத்துவ சுயராஜ்யக்கொடியை ஸ்ரீமான்கள் நாயக்கர், நாயடு, ஆரியா முதலியவர்கள் நாட்டப் போகிறார்களென்பதை நீங்கள் மனதில் வைத்துக்கொண்டு அதற்கேற்ற வழியில் சமாதான உடன்படிக்கைகளைப் பூர்த்தி செய்த பிறகு மன்னிப்பு கேட்க வேண்டும்.

இரண்டாவதாக பிராமணர்கள், சாராயக்கடை ஏலம் கட்டுப்பாடாக எடுக்காமலிருப்பது போலும் பிராமணரல்லாதார்கள் தான் அப்படி ஏலம் எடுக்காமலிருப்பதற்கு ஒற்றுமைப் பட்டு ஆகவேண்டிய திருப்பது போல் எழுதியிருக்கிறீர்கள். மது விலக்கு பிரசாரத்தில் பிராமணர்கள் அவ்வளவு தேசபக்தர்களென்றால், முதலாவதாக காந்தி சிஷ்யர் என்று சொல்லிக் கொள்ளும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு காரியதரிசியாயிருக்கும் உங்கள் குலத்திலுதித்த ஸ்ரீமான்கள் ஏ. ரெங்கசாமி அய்யங்காரை "சுதேசமித்திரன்" பேப்பரில் "அக்ஷா" சாராயத்தையும் "பிஸ்கட்" சாராயத்தையும் வாங்கிக் குடியுங்கள் என்று சொல்லப்பட்ட விளம்பரத்தை எடுத்து விடும்படி செய்யுங்கள். அல்லது அவர் வகித்து வரும் காங்கிரஸ் பதவியையும் அங்கத்தினர் பதவியையும் "சுதேசமித்திரன்" ஆசிரியர் பதவியையும் ராஜிநாமா செய்து விடும்படி செய்யுங்கள். இன்னும் மற்ற ஸ்ரீ. வெங்கட்டரமணய்யங்கார்கள் போன்ற காந்தி சிஷ்யர்களை மரங்கள் குத்தகைக்கு விட்டிருந்தால் பணத்தை குத்தகைக்காரனிடம் திருப்பிக் கொடுத்து குத்தகையை ரத்து செய்யுங்கள். நீங்கள் ஆகஸ்டு மாதங்கள் ஏலத்தை பிராமணரல்லாதார்கள் எடுக்காமலிருப்பதற்கு முயற்சி செய்வதைக் காட்டிலும் உங்கள் வம்சத்தைச் சார்ந்தவர்கள் சாராயச் சரக்குகள் பத்திரிகைகளில் விளம்பரம் செய்யாமலும், விளம்பரப் படுத்தப் பட்ட பத்திரிகைகளை பகிஷ்காரம் செய்தும், மரங்களை கள் குத்தகைக்கு விடாமலும், சாராயக்கடைகளில் உட்கார்ந்து வியாபாரம் செய்யாமலிருக்கும்படி முயற்சி செய்தால் உங்களுக்கு தாங்கள் கோரிய ஆண்டவன் அருளும் மகாத்மாவின் ஆசிர்வாதமும் கிடைக்கும்.

ஜி. மாணிக்கம் பிள்ளை,

சோழிய வேளாள மகாஜன 3-வது மகாநாடு.

சோழிய வேளாள 3-வது மகாநாடு 1926-ஸூ ஆகஸ்டு மாதம் 14, 15-ம் தேதிகளில் சென்னை அபிவிருத்தி இலாக்கா மந்திரி கனம் சர். டி. என். சிவஞானம் பிள்ளையவர்கள் தலைமையின் கீழ் கும்பகோணத்தில் நடைபெறும். மகா நாடு நடைபெறும் சமயத்தில் விவசாய, கைத்தொழில் கண்காட்சி ஒன்றும் நடைபெறும். அதுகாலை ராஜா சர். ராமராய நிங்கார், திருவாளர்கள் ஈ. வெ. இராமசாமி நாயக்கர், திரு. வி. கலியாண சுந்தர முதலியார், சக்கரைச் செட்டியார், சுரேந்திர நாத் ஆரியா, அ. இராமசாமி முதலியார், டாக்டர் நடேச முதலியார் முதலிய கனவான்களும் விஜயம் செய்வார்கள். டாக்டர் எஸ். முத்துக்குமாரசாமிப் பிள்ளை, பி. ஏ., எம். பி., அண்டு பி. எஸ் அவர்கள் வரவேற்புக் கமிட்டித் தலைவராயும் கே. எஸ். சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் காரியதரிசியாயுமிருப்பார்கள் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

மதிப்புரை

—:0:—

"தமிழன்,"

பௌத்த சமபத்தவரால் வெளியிடப்பெறும் "தமிழன்" என்னும் வாரப்பத்திரிகையின் முதல் நான்கு இதழ்கள் நமது பார்வைக்கு வரப் பெற்றோம். இதன் ஆசிரியர் திரு. ஜி. அப்பாத்துரையார் அவர்களாகும். வெளியிடுவோர் திரு. பி. எம். இராஜரத்தினம் அவர்களாகும். இப்பத்திரிகையில் பல சிறந்த கட்டுரைகள் வெளிவருகின்றன. தாழ்த்தப்பட்ட வகுப்பாரின் பொருட்டு முன்னணியிலிருந்து போராடும் பத்திரிகைகளில் இதுவும் ஒன்றென்றே கூறலாம். தற்சமயம் இப்பத்திரிகை "குடி அரசு" அளவில் 8-பக்கங்கொண்டதாய் வெளிவருகிறது. இதன் வருட சந்தா ரூ, 3.

மானேஜர், "தமிழன்",
கோலார் தங்கவயல்.

"ஆனந்தபோதினி."

பல நாட்களாய் தமிழகத்தில் தாண்டவமாடும் "ஆனந்த போதினி"ப் பத்திரிகையைப் பற்றி தமிழ் நாட்டவருக்கு நாம் அறிமுகம் செய்து வைக்க வேண்டியதில்லை. அப்பத்திரிகைக்கு இம்மாத முதல் 12-ம் வயது தொடங்குகிறது. முன் போலவே இப்பத்திரிகையில் பல சிறந்த விஷயங்கள் வெளி வருகின்றன. 12-ம் தொகுதியின் முதல் பகுதியில் காணப் பெறும் "இராட்டினமும் அதன் பெருமையும்" என்ற கட்டுரை நாட்டிற்கு நல்விருந்து அளிப்பதாகும்.

"ஆனந்த போதினி" ஆபீஸ்,
வெங்கடேச மேஸ்திரி வீதி, சென்னை.

சூரியகுலக் கள்ளர் சரித்திரம்.

சின்னாட்களாக தமிழ் நாடெங்கும்-என் இந்தியா வெங்கும்-பல குல மகாநாடுகள் கூடுவதும் பல குலத்தவர் சரித்திரங்கள் வெளியாவதுமாயிருந்து வருவது நாட்டு முன்னேற்றத்தின் ஓர் அறிகுறியாகும். வேளிர், நாகர், சோழர், பல்லவர், எனப் பெறும் சூரியகுலக் கள்ளர் சரித்திரம் ஒன்று நமது பார்வைக்கு வரப் பெற்றோம். இது நல்ல கடிதத்தில் 162 பக்கங்கள் கொண்ட புத்தகமாகும். இதனை திருக்களர். திரு. மு. சுவாமிநாத உபாத்தியாயர் என்கிற மு. சுவாமிநாத மாதவராயரால் சங்க நூல்களையும், திருமுறைகளையும் பிரபந்தங்களையும் ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டதாக இந் நூலில் காணப்பெறும் மேற்கோள்களிலிருந்து அறிகிறோம். இச்சரித்திரம் இதன் ஆசிரியரிடம் கிடைக்கும்.

திவான் பகதூர் கோழைநாத சாஸ்திரி.

பணத்திமிறும் ஜாதி இறுமப்பும் படைத்த கூட்டத்தை ஒடுக்குதா கென்றே "சமத்துவமே எனது மதம், சமத்துவமே எனது உயிர் சமத்துவமே எனது தெய்வம்' என்கிற சிங்க முழக்கத்துடன் "சமத்துவ ஊழியன்" என்னும் பத்திரிகைக்கு ஆசிரியராயிருந்து நடாத்தி வரும் திரு. வீ. அருணாசலம் அவர்களால் ஆக்கப்பட்ட திவான் பகதூர் கோழைநாத சாஸ்திரி அல்லது போலித் தேசாபிமானி என்னும் ஒரு சிறு நவீனம் நமது பார்வைக்கு வரப் பெற்றோம். அரசியல் சம்பந்தம் பெற்ற நாவல்களில் இதுவும் ஒன்று. கதையை விரைவில் வளர்த்துக்கொண்டு செல்லாது சுருக்கி அனைவரும் எளிதில் அறியத்தக்க விதமாய் நயம்பட எழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 8. விலாசம்:—

கே. எஸ். தர்மலிங்க பூபதி,
53 செட்டித்தெரு, கொழும்பு.

இதற்கென்ன சொல்லுவார்கள்?

ஜஸ்டிஸ் கட்சி உத்தியோக வேட்டைக் கட்சியெனவும், மந்திரிகள் தம் நண்பர்களுக்கும் உற்றார்களுக்குமே பதவிகளை வழங்கி வருகிறார்களெனவும், சுயராஜ்யக் கட்சியார் சொல்லாத நாளே கிடையாதெனலாம். ஆனால் உண்மை என்ன? உத்தியோக வேட்டையாடுபவர்கள் யார்? நண்பர்கட்கும் உற்றார்கட்கும் பாரபட்சமாய் இருப்பவர்கள் யார்? வேலூரில் ஜில்லா கோர்ட்டுக்குப் பப்ளிக் பிராசிகியூட்டர் பதவிக்கு ஓர் பார்ப்பனர் சமீபத்தில் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் பெயர் திரு. நரசய்யர். ஏற்கனவே இரண்டு முறைகளில் இவ்வுத்தியோகங்களிலிருந்தவர். இப்போது மூன்றாம் முறையும் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு வயதோ 57. வேலூரில் இவரைத் தவிர தகுதியான வேறு வக்கீல்கள் இல்லையா? இவரை மூன்றாம் முறையும் நியமிக்க வேண்டிய காரணமென்ன? தவிரவும் 50 அல்லது 55 வயதுக்கு மேற்பட்டவர்களை பப்ளிக் பிராசிகியூட்டர்களாக நியமிக்கப்படாது என்ற அரசாங்க உத்திரவொன்று இருக்கிறதென்று அறிகிறோம். அஃது உண்மையாயின் 57 வயதுள்ள திரு. நரசய்யர் மீண்டும் நியமிக்கப்படுவானேன்? அந்த அய்யர் சட்ட இலாகா மந்திரிக்குப் பந்துவென்று சொல்லப்படுகிறது. அது தான் காரணமோ? பிராமணர்கள் இவ்வாறு இரண்டு அல்லது மூன்று தடவைகள் கூட நியமிக்கப்படுகையில்பிராமணரல்லாதார்களுக்கு மட்டும் ஏன் அவ்வாறு செய்யக்கூடாது? திவான் பகதூர் எம். கோபாலசாமி முதலியாருக்கு மிகுந்த கஷ்டத்துடன் ஆறு மாதகாலம்வரைதான் உத்தியோகம் நீடிக்கப்பட்டது. ஆனால் தஞ்சாவூரில் இப்போதுள்ள பிராமணப் பப்ளிக் பிராசிகியூட்டர் மூன்று ஆண்டுகளாய் வேலை பார்த்து வருகிறார். உத்தியோக வேட்டையாடுபவர்களும் நண்பர்களுக்கும் உற்றார்களுக்கும் பாரபட்சமாய் நடந்துகொள்பவர்களும் யார்? நாமா அல்லது பார்ப்பனர்களா?

***

மத்திய மாகாணத்தில் சுயராஜ்யக் கட்சி அஸ்தமித்துவிட்டது. மத்திய மாகாண சட்ட சபையில் சுயராஜ்யக் கட்சியின் தலைவராயுள்ள திரு. இராகவேந்திர ராவ் அவருடைய பதவியினின்றும் விலகிக்கொண்டார். அவரும் இன்னும் பலரும் பண்டித நேருவுக்கு எழுதியிருக்கும் கடிதத்தில் தடை வேலையின் பயனற்ற தன்மையை விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். அவர்கள் சுயராஜ்யக் கட்சியின் சார்பாகத் தேர்தலுக்கு நிற்கப்போவதில்லை. "நாங்கள் சுயேச்சைக் காங்கிரஸ்காரர்களைத் தேர்தலுக்கு அபேட்சகர்களாக நிற்கப் போகிறோம்" என்று அறிவித்து விட்டார்கள். தேசத்திலேயே பெரிய கட்டுப்பாடான கட்சி எங்கே போயிற்று.

***

1924-ம் ஆண்டில் சுயராஜ்யக் கட்சியார் 44 பேர் அம்மாகாணச் சட்ட சபையிலிருந்தனர். ஆனால் இவ் வாண்டில் 10 பேர்களுக்கு மேல் வெற்றிபெறமாட்டார்களாம்.

"தேசபக்தன்"

"தேசபக்தன்" பத்திரிகை கொழும்பிலிருந்து வெளிவரும் வார மும்முறைப் பதிப்பாகும். இதன் ஆசிரியராயிருக்கும் திரு. கோ. நடேசய்யரைப்பற்றி நாம் நன்கு அறிவோம். தஞ்சையினின்று வெளிவந்த "வர்த்தகமித்திரன்" பத்திரிகையும் திரு. நடேசய்யரையே தன் ஆசிரியராகக் கொண்டிருந்தது. அக்காலை "வர்த்தக மித்திர"னில் ஒழுங்காகவும் தேச நலங்கருதியும் எழுதப் பட்ட கட்டுரைகளே வெளிவந்தன.

ஆனால் இப்பொழுது அதே திரு. நடேசய்யரை ஆசிரியராகக் கொண்ட "தேசபக்தன்" தாங்கிவரும் கட்டுரைகள் ஒரே ஒரு குறிப்பிட்ட ஜாதியின் மாட்டு அன்போடும் அபிமானத்தோடும் எழுதிவருவதுபெரிதும் வருந்தத்தக்கதாகும். வெளிப்படையாகக் கூறப்புகின் "தேசபக்த"னும் பார்ப்பனப் பிரசாரம் செய்யத் தொடங்கிவிட்டான் என்றே கூறவேண்டும். சென்னையில் நடைபெறும் பார்ப்பனப் பத்திரிகைகள் செய்து வரும் பார்ப்பனப் பிரசாரம் போதாதென்று வெளிநாடு சென்று பிழைக்கப் போன தமிழரின் குடியைக் கெடுக்க, மலாய் நாட்டில் "தமிழ் நேசன்" என்றும் இலங்கையில் "தேசபக்தன" என்றும் இரு பார்ப்பனப் பத்திரிகைகள் தோன்றியுள்ளதென்றே கூறவேண்டும்.

கறுப்பு நிறங்கொண்ட ஆட்டை வெள்ளாடு என்பதுபோல பார்ப்பன பக்தனாகயிருப்பவன் "தேசபக்தன்" என்று பெயர் பூணி தமிழர்களைப் பாழ்படுத்த முயலுவதை நாம் கண்டிக்காமலிருக்க முடியவில்லை. ஆதலால் இதை இனித் தமிழ் மக்கள் ஆதரிப்பது கொள்ளிக்கட்டை எடுத்து தலையைச் சொரிந்து கொள்வதாகும்.

சுயேச்சைக் காங்கிரஸ் காரர்கள் 20 அபேட்சகர்களை நிறுத்தப்போகிறார்களென்றும், அவர்களில் 18 பேர் வெற்றியடைந்து விடுவார்களென்றும் அறிகிறோம். ஆகவே மத்திய மாகாணத்தில் சுயராஜ்யக் கட்சியை அக் கட்சியாரே குழி வெட்டிப் புதைத்து விட்டார்கள். மயிலாப்பூர் சீனிவாசய்யங்கார் அகில இந்திய சுயராஜ்யக் கட்சிக்குத் தலைவராய் நியமிக்கப்பட்ட நேரம் நல்ல நேரந்தான்.

***

மனித வர்க்கத்திற்கே பகைவரான எம். கே. ஆச்சாரியென்றவோர் பார்ப்பனர் ஜஸ்டிஸ் கட்சியை அதர்மக் கட்சியென்றும், துரியோதனன் கட்சி யென்றும், "டாக்டர் நடேச முதலியார் பீஷ்மரைப்போல் அவ்வளவு சிறந்த புருஷரல்ல வென்றும்" அயோக்கியத்தனமாய்ப் பேசியிருப்பது மல்லாமல் அவரை (டாக்டர் நடேச முதலியாரை வரப் போகும் தேர்தலில் வீழ்த்தவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்) எது அதர்மக் கட்சியென்றும், துரியோதனன் கட்சி யென்றும், டாக்டர் நடேச முதலியார் அடைந்த வெற்றியிலிருந்து தெரிந்துவிட்டது.

"திராவிடன்"

பீளமேடு.

இவ்வூர் கோயமுத்தூர் ஜைசந்துக்கடுக்கு கீழ்புரம் அவனாசி ரோட்டு (3) மூன்றாவது மைலில் உள்ளது.

இவ்வூரில், ஒரு ஹைஸ்கூலும், ஹாஸ்டலும் உண்டு, இந்த ஸ்கூலுக்குப் புதியதாக ஒரு ஹெட்மாஸ்டர் ஆர், ஸ்ரீநிவாசய்யங்கார் என்பவர் வந்திருக்கிறார்,

மற்றும் இவ்வூரில் பி, எஸ். ஜி, அண், சன்ஸ் அவர்களால் ஏற்படுத்தியுள்ள இண்டஸ்டிரியல் இன்ஸ்டியூட் என்ற தர்ம ஸ்தாபனத்திற்குக் கட்டடம் கட்ட எஸ்டிமேட் தயார் செய்ததில் (1,70000) ஒருலட்சத்தெழுபதனாயிரம் ரூபாயாகுமென்றும், புது மாதிரியான மெஷின்கள் வாங்குவதற்கு (50000) ஐம்பதனாயிரம் ஆகுமென்றும் கவர்ன்மெண்டு எஞ்சினியர்களால் உத்தேச திட்டம் போடப்பட்டுள்ளது. ஆக இரண்டு லட்சத்திருபதாயிரம் (2,20000) ரூபாய்த் தொகையையும் செலவழிப்பதில், காருண்ய கவர்ன்மெண்டார் சரிபகுதி தொகையும், பி. எஸ், ஜி, அண், சன்ஸ், அவர்கள் பகுதி தொகையும் கொடுத்து வேலையைப் பூர்த்தியாக்குவதென்ற விஷயத்தைக் கைத்தொழில் இலாகா டைரெக்டர் மிஸ்டர், கிரீன் துரையவர்கள் சமூகம் தர்மஸ்தாபன மானேஜர் பி. எஸ். ஜி. றங்கசாமி நாயுடு அவர்கள் நேரில் சென்று பேசி வேண்டிய ஏற்பாடுகள் செய்து வந்துள்ளார்கள்.

இவ்வூரிலுள்ள, ஹைஸ்கூலின் தொடர்பில் சைன்ஸ் கிளாசிற்காகக் கட்டடம்கட்டுவதற்காக காருண்ய கவர்ன்மெண்டார் (13220) பதின்மூவாயிரத்திருநூற்றிருபது ரூ. தொகையில் கட்டடம் கட்டலாமென்று ஸ்கூல் மானேஜர் ஸ்ரீமான் பி. எஸ். ஜி. றங்கசாமி நாயுடுகார் அவர்களுக்கு அநுமதி அளித்துள்ளார்கள்.

'குமரன்'

காரைக்குடியினின்று வெளிப்போந்தும் "குமரன்" இதுவரை தனிப்பட்ட ஒருவரால் நடத்தப்பட்டு வந்தது. இவ்வார முதல் "குமரன்" பத்திரிகையை ஒரு லிமிடெட் கம்பெனியாக ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறதென்று அறிகிறோம். அரசியல் உலகில் நிறை மறைவிலிருந்து வந்த "குமரன்" இனி யாவது தன் சுய ரூபத்துடன் வெளிவருமென்று நம்புகிறோம்.

கண் தைலம்.

சிறந்த அனுபவ நேத்ர ரோக நிவாரணி.

இம்மேன்மையான தைல ஸ்நானத்தால் கண் நோய், கண் குத்தல், கூசல், நீர் வடிதல், கண் மங்கல், மேகநீரால் குருடாதல் அந்திமாலை, பீளை கட்டல், மாமிசம் வளர்ந்திருத்தல், பூவிழுதல், கண் சிவப்பு, கண் இமை புருவங்களில் வலி, கண்புகைச்சல், தலைநோய்களும் குணமாகிவிடும். கண் குளிரும். ஒரு டின் ரூ. 3. வி. பி. அணா 8.

பிரஜாநுகூல ஔஷதாலயம், ஸ்ரீரங்கம்.

கணக்கில்லா நற்சாக்ஷிப் பத்திரம் பெற்றது.

அயன் மஹா மூலிகை சந்தனாதி தைலம்.

சிரசைப் பற்றிய நோய்களுக்கு தேவாமிர்தம் போன்றது.

உஷ்ணமான வேலைக்காரர்களுக்கும் உஷ்ணதிரேகி, மாணக்கர், வக்கீல், ஜட்ஜுகள் முதலியோர் பலரும் உபயோகித்து வருகின்றனர்.

பரிமள மணமும் சிறந்த குண முடையது. பத்தியமில்லை.

கண்ணெரிவு, கண் சிகப்பு, கண் கூச்சம், கண்ணில் நீர் வடிதல், பார்வைக் குறைவு, பித்த மயக்கம், பயித்தியம், ஞாபகக் குறைவு, அஸ்திகாங்கை, மூலச்சூடு, நீர் எரிவு, நீர்க் கடுப்பு, தாகம், நித்திரை பங்கம், பூச்சி வெட்டு, வழுக்கை, மண்டைக் குத்தல், ஒருத்தலைவலி, தலைச்சொறி, காதுவலி, காதுகுத்தல், மயிர்ப் பிளவு, மயிர் உதிர்தல் செம்பட்டை, ஆரம்ப நரை, தேகநாற்றம், முதலிய வியாதிகளைப் போக்கி உரோமத்தை கருக்கச் செய்யும் திறமை வாய்ந்த தைலம் இது ஒன்றே.

12-அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 1-8-0

24-அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 3-0-0

வாரம் இரு முறை எண்ணெய் ஸ்நானத்திற்குப் பதிலாக உபயோகிப்பதுடன் அனுதினமும் தலைவாரிக் கொள்ளலாம்.

40 வகை பித்தத்திற்கும் ஜீரக ரசாயனம் 2-சேர்	ரூ. 2—0—0
இரத்த விருத்திக்கு வீரிய தாது லேகியம் 1-சேர்	ரூ. 2—0—0
பாலர் ரக்ஷணி நான்கு வகை மாத்திரை 200-க்கு	ரூ. 2—0—0
சுக பேதி மாத்திரை அல்லது இரா பேதி 100 மாத்திரை	ரூ. 1—0—0
சுக பேதி பவுடர் 100 வேளைக்கு	ரூ. 1—0—0
ஓம சத்து அரை அவுன்ஸ் புட்டி 1-க்கு	ரூ. 1—0—0
காலரா சஞ்சீவி திராவகம் 1-அவுன்ஸ் புட்டி 1க்கு	ரூ. 2—0—0
காது நோய்க்கு கர்ண பிந்து 1-அவுன்ஸ் புட்டி 1-க்கு	ரூ. 1—0—0
சோகை பாண்டுகளுக்கு அய காந்த சத்து 40 வேளைக்கு	ரூ. 1—0—0

குறிப்பு:— இன்னும் எல்லா வியாதிகளுக்கும் கை கண்ட மருந்துகள் நேரிலாவது தபால் மூலமாவது பெற்றுக் கொள்ளலாம். எனது தரும வைத்திய சாலையில் இவ் வருடம் 15000 வியாதியஸ்தர்களுக்கு மருந்து கொடுத்து சகல வியாதிகளையும் குணப்படுத்தி இருக்கிறேன். திருச்சியிலே பிரபல தன வந்தர்களின் குடும்பங்களுக்கு குடும்ப வைத்தியராக இருந்து வருகிறேன்.

டாக்டர். ஜி. எல். சாமி,

சத்திய வேத வைத்தியசாலை, வாகநேரி—திருச்சினாப்பள்ளி.

ஆனந்த குணபோதினி

ஒரு நூதன உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை

பிரசித்த அநுபவஞான சாஸ்திரி இதன் ஆசிரியராய் விளங்குகிறார்.

இத்தகைய நவீன ஸஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை. இது தமிழ் அறிந்த ஒவ்வொருவர் அகத்துள்ளும் புகுந்து நிலவும் உன்னதம் வாய்ந்தது. சித்திரப்படங்களுடன் திகழ்வது. கல்விச் செல்வம், பொருட்செல்வம் பெருகி இன்பம் நுகருதற்குரிய வியாசங்களால் ஒளிர்வது. அறிவை விளக்கி உற்சாகத்தைக் கொடுப்பது. நன்னடக்கையும், லௌகிக யுக்தியும், பாஷை ஞானமும், தேசாபிமானமும், ஈசுவர பக்தியும், ஆழ்ந்த யோசனையையும் உண்டாக்கக் கூடியது. எல்லா மதஸ்தர்களுக்கும், எல்லா ஜாதியார்களுக்கும் ஏற்றதாய் நல்ல விஷயங்கள் இருக்கப் பெற்றது. சொல் நயம் மிகுந்து தமிழ் உலகமெல்லாம் ஜொலிக்கும் படியாயிருப்பது "ஆனந்த குணபோதனி" தான். ஆடவர், மகளிர், பெரியோர், சிறியோர், எவர் கையிலும் இப்பத்திரிகையை இனிக் காணலாம்.

இதில் "ஆனந்த தரிசனம்" "பழமொழிக் குறிப்புகள்" "பத்திரிகா சாரம்" "பெண்கள் பக்கம்" "பிரபஞ்ச தரிசனம்" "விகடப் பிரதாபன்" "சென்ற மாதம்" என்ற தலைப் பெயர்களின் கீழ்வரும் ஒவ்வொரு விஷயங்களும் சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய அலங்கார வசனமழையாய் விளங்கும். இப்பத்திரிகையே எவ்விஷயத்திலும் வெகு சிறந்ததென்பதை தங்களுடைய அநுபவத்தில் தாங்களே அறிந்து கொள்ளலாம். ஆனந்த குணபோதினியின் சொற்ப சந்தாவை உற்று நோக்குங்கள். வருஷச் சந்தா ரூபாய் ஒன்றே (ரூ-1) இன்றே எழுதுங்கள், உடனே சேருங்கள்.

தி இராஜகோபால் முதலியார்,

புரோப்ரைட்டர், "ஆனந்த குணபோதினி" ஆபீஸ்,

302, தங்கசாலைவீதி. சென்னை.

இந்தியர் கஷ்டநிவாரண பாங்கு "லிமிடெட்" கோயமுத்தூர்

காப்பு திரவியம்—	ரூ. 2,706.
மூல திரவியம் —	ரூ. 5,00,000.
வெளிவிடப்பட்டது —	ரூ. 69,100,
வசூலிக்கப்பட்டது —	ரூ. 43,890.
டிபாசிட்டுகள்	ரூ. 62,580-1-0.

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி வீதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

சேவிங்ஸ் பிக்செட் டிபாசிட்டு

இரண்டு வருஷ, கெடுவு வட்டி.

100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—10—0

வருஷம் 1-க்கு வட்டி ரூ. 7—8—0

இதற்கு பிரதி மாதமும் வட்டி கொடுக்கப்படும்.

பிக்செட் டிபாசிட்டு.

ஒரு வருஷ கெடுவு, வட்டி.

100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—9—0

வருஷம் 1-க்கு வட்டி ரூ. 6—12—0

இதற்கு வட்டி 6-மாதங்களுக்கொருமுறையாவதும் வருஷத்திற் கொருமுறையாவதும் கொடுக்கப்படும்.

டி பாங்கானது ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருஷ காலமாக ஒழுங்காக நடந்து வருகிறது. நாளது 10-2-26-ஃ வருஷாந்திரக் கூட்டமும் நடைபெற்றது. இப்பாங்கானது கோயமுத்தூரில் உள்ள இம்பீரியல் பாங்கை தவிர்த்து மற்ற பாங்குகளைப்போல் 100-க்கு நாள் 1-க்கு ஒரு அணாவும், அதற்கும் அதிகமாகவும், அதிகவட்டி வாங்காமலும், புதிய விதிகளுடனும் குறைந்த வட்டிக்கு (அதாவது 100-க்கு, 0—12—0. 1—0—0) ரூபாயிக்கு எவ்வகையிலும் அதிகப்படாமல் ஏழை ஜனங்களுக்கு அநேக சௌகர்யமாகவும் இருப்பதோடு, குறைந்த பங்குகளிலேயும் மானேஜிங் டைரெக்டர், அவர்களுடைய திறமையினாலும், முயர்ச்சியினாலும், பங்குக்காரர்களுக்கு முதல் வருஷத்திலேயே 100-க்கு ஒரு ரூபாய் வட்டி கொடுக்கப்பட்டிருப்பதுவும் தவிர ரிசர்வு பண்டு ரூபாய் 2,706 சேர்ந்திருக்கிறது. நாளதுவரை யாதொரு போக்குக்குத்தியில்லாமலும் இருப்பதிலிருந்து மானேஜிங் டைரெக்டருடைய தீர்க்காலோசனையும், பாங்கின் நல்ல ஸ்திதியையும் காட்டுகிறது. மேலும் அதிகமான பங்குகள் சேர்ந்து ஏராளமான லேவாதேவி நடந்தால் இப்போது கிடைத்த இலாபத்தைவிட அதிக இலாபம் கிடைக்குமென்றும், ஏழைகளுக்கும் பெரிய உபகாரமாக இருப்பதற்கும் கடவுள் கிருபை செய்வாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

குறிப்பு:—

இந்த பாங்குக்கு ஏற்பட்டிருக்கும் டைரக்டர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி சொந்த பாங்கு நடத்தக்கூடிய சக்தி வாய்ந்த பெரிய பெரிய தனவந்தர்களாகவும், அமையப்பெற்றிருப்பதால் யாவரும் தங்களிடமுள்ள திரவியத்தை டிபாஸிட்டாகவும் பங்குத் தொகைக்காகவும் இப்பாங்குக்கு அனுப்பி உங்களுடைய பணத்திற்கு யாதொரு நஷ்டமின்றி வட்டியுடன் பெற்றுக்கொள்வதோடு, உங்களுடைய திரவிய சகாயத்தினாலும், ஏழைகளுக்கும் சகாயம் செய்த பாக்கியமும் அடைவீர்கள் என்பதற்கு யாதொரு தடையுமில்லை,

ஜி.ராமச்சந்திர செட்டி,

31—5—26. மானேஜிங் டைரக்டர்

சற்குருவே துணை.

ஸ்ரீ நமசிவாயகுரு தமிழ்சித்த ஆயுள் வேத வைத்தியசாலை, கோயமுத்தூர்.

இக் கோயமுத்தூரிலும் சென்னை முதலான விடங்களிலும் தீராதெனக் கைவிடப் பட்ட கொடிய வியாதிகளை வெகுசீக்கிரத்தில் சவுக்கியம் செய்து அநேக நற்சாக்ஷிப் பத்திரங்களும் பரிசுகளும் மெடல் சங்கிலி முதலியவை பெற்றவரும் ஸ்ரீ நமசிவாய குரு தமிழ் சித்த ஆயுள் வேத வைத்திய சாலை அதிபருமாகிய கோ. ந. முருகைய பண்டிதர் அவர்களால் தயார் செய்யப்பட்டு உலக பிரசித்தி அடைந்து வரும் ஔஷதங்கள்.

மேக ராஜாங்க மதன விந்தாதி லேகியம்.

மேலேகண்ட மேகராஜாங்க மதன விந்தாதி லேகியத்தை காலை மாலை இரு வேளையாக ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவதினால், 20. வகை மேகத்தை போக்கி திரேகத்தை பசும் பொன் போல் செய்வது மன்றி, சிலேற்பனம் 96ம் கிரந்தி, அரையாப்பு, சூலை, க்ஷயம், ஈளை இருமல், மந்தாரகாசம், காமாலை, சோகை, பாண்டு, குன்மம் 8-ம் கிரிச்ரனங்கள் 6-ம் வாய்வு 26ம் பித்தம் 40-ம் இலிங்க புற்று, ஸ்திரிகளுக்கு யோனி புற்று, வெள்ளை, மஞ்சள் வெள்ளை, பிர மேகம் சொறி கரப்பான், மேக ஊறல், தண்டில் புண், கண்ட மாலை, மகோதிரம், கீர்மை, கவுசி, உள மாந்தை, அஸ்திஜுரம் அஸ்திவெட்டை, உஷ்ண வாய்வு அசீரணசகம், அன்னத்துவேசம் வாந்தி, விக்கல், கால்கை எரிவு, பெரும்பாடு, எலும்பு புருக்கி நோய், மூல வாயுவு, மூலத்தில் ரத்தம், கிரு கிருப்பு மயக்கம், நித்திரை, ஸ்திரிகளுக்கு கெற்ப நோய் 7ம் ஸ்திரிகள் மலடியாயிருந்தால் கெற்பம், நீரடைப்பு, சதையடைப்பு, துர்மாங்கிச அடைப்பு, சீதக்கடுப்பு, முதலான கொடிய ரோகங்களை சுகப்படுத்தி தேகம் சிவந்து மின்னும் இந்திரியம் இருகி கட்டும் இதை வயோதியர்கள் சாப்பிட்டு வருவார்களானால் ஜீவாதாரநரம்புகள் முருக்கேறி தாது விர்த்தியையும் ஆண்மையையும் உற்சாகத்தையும் தேகாரோக்கியத்தையும் ஆனந்த சுகத்தையும் கொடுப்பதில் இதற்கு நிகரான லேகியம் வேறேயில்லை யென்று உறுதியாய் கூறுகிறேன். ஆண் பெண் யாவர்களும் சாப்பிடலாம் ஒரு தரம் வாங்கி அநுபவிப்பீர்களானால் இதன் உண்மை நன்கு விளங்கும். பத்தியமில்லை.

48-நாள் சாப்பிடக்கூடிய லேகியம் சேர் 1-க்கு விலை 5-0-0

24-நாள் ,, சேர் $\frac{1}{2}$-க்கு விலை 2-8-0

12-நாள் ,, சேர் $\frac{1}{4}$-க்கு விலை 1-4-0

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

குணத்திற் சிறந்தது விலை குறைந்தது!! பரிமளமிகுந்தது!!!

சர்வ மேகங்களுக்கும் மகா ராஜாங்க சுகந்த பரிமளாதி ஸ்நானத்தைலம்.

மேலே கண்ட சுகந்த பரிமளாதி ஸ்நானத் தைலத்தை ஆண் பெண் யாரும் ஸ்நானம் செய்து வருவதாலும் நித்தியம் தலையில் தடவி தலைவாரி வருவதினாலும் தீரும் வியாதிகள், மேகம், நீரெளிவு, நீர் எரிச்சல், கிரிச்சனம், க்ஷயரோகம், கண்ணெரிவு, கண் புகைச்சல், கைகாலெரிவு, பிரமேகம், ரணம், கிரந்தி கற்றாளை நாத்தம், அஸ்திஜுரம், அஸ்தி வெட்டை, உள் வெட்டை, தாது நஷ்டம் பித்தத்தாலுண்டாகும் மயக்கம் புண் புரை முதலானவைகளும் குழந்தைகள் முதல் ஆண் பெண் யாவர்களும் தலைக்கு பத மிட்டு வாரி வந்தால், தலையில் மேகத்தினாலுண்டாகும் பொடு அதினால் சகிக்க முடியாத அரிப்புண்டாகி கோதுமை தவிடுபோல் உதிருகின்றதும் மாறிப்போகும். இந்த தைலமானது எங்கள் முன்னோர்களால் கையாண்டு வந்ததும் என் அநுபவத்துக்கு வந்து ஆயிரக்கணக்கான ரோகிகளுக்கு சகல வியாதிகளையும் சவுக்கியப்படுத்தி இருக்கிறேன். மேற்படி சுகந்த பரிமளாதி ஸ்நான தைலமானது யாதொரு நோய் வராமல் பாது காப்பதோடு ராஜ கருவியாகிய மூளைக்கு குளிர்ச்சியையும் கண்களுக்கு பூரண சந்திரன் போன்ற குளிர்ந்த பிரகாசத்தையும் திவ்விய தேஜஸ்ஸையும் ஞாபக சக்தியையும் உற்சாகத்தையும் தேகாரோக்கியத்தையும் கொடுக்குமென்பதில் சந்தேகமில்லை. பத்தியமில்லை.

☞ 24-அவுன்ஸ் கொண்ட சீசா 1-க்கு விலை 5—0—0 ☞ 12-அவுன்ஸ் கொண்ட சீசா 1-க்கு விலை 2—8—0

☞ 6-அவுன்ஸ் கொண்ட சீசா 1-க்கு விலை 1—4—0 வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

வசந்த குஸுமாகர கஸ்தூரி வாய்வு குளிகை.

மேலேகண்ட கஸ்தூரி வாய்வு குளிகையானது தங்கம், வெள்ளி, முத்து, பவளம் தாம்பிரம் முதலாகியவைகளாலும் உயர்ந்த சரக்குகளாலும் பெரும்பாலும் சாஸ்திர ரீதியாய் மிக்க பிரையாசையுடன் யாவரும் எளிதிலடையும்படி சித்தம் செய்யப்பட்ட இந்த கஸ்தூரி வாய்வு குளிகையை உபயோகித்து வருவதினால் உஷ்ணத்தினாலுண்டாகும் வாய்வு, மாரடைப்பு, இடுப்புவலி, வயற்றுப்பிசம், நீர்கட்டு, பெண்களுக்கு கெற்பபையிலுமுள்ள ரணம், அதினால் சீழுண்டாகி வயற்றில் குத்தல், வெள்ளை விழுதல், சகிக்க முடியாத வயற்றுவலி, இவ்வித வியாதிகளுக்கு இங்லீஷ் வைத்தியர்கள் வயிற்றை ஆப்பிரேஷன் செய்து பார்க்காமல் நிவர்த்தி செய்ய முடியாதென்று முடிவு சொன்ன வியாதிகளை அநேகர்களுக்கு எங்களுடைய வசந்த குஸுமாகர கஸ்தூரி வாய்வு குளிகையினால் நாலு ஐந்து வேளையில் பூரண சொஸ்தப்படுத்தி அதனால் பரிசுகளும் மெடல்களும் சங்கிலி முதலானதும் பெற்றிருக்கிறேன்.

மேல்கண்ட வசந்த குஸுமாகர கஸ்தூரி வாய்வு குளிகை அற்புத குண முடையன என்பதிற் சற்றும் சந்தேகமில்லை.

☞ 12-மாத்திரை கொண்ட சீசா 1-க்கு விலை 1—4—0 வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

உபயோகப்படுத்தும் விபரம் மருந்துடன் அனுப்பப்படும்.

☞ ஏஜண்டுகள் தேவை தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

மருந்து கிடைக்குமிடம்:—

பழனிவேல் பிள்ளை,

சோல் ஏஜண்டு, பெரியகடை வீதி, கோயமுத்தூர்.

மின்சார ரசம்.

எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது.

மின்சார ரசத்தின் குணம் எப்படி?

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில்கிடையாது.

மின்சார ரசத்தின் விசேஷமென்ன?

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அநுபானமுமில்லை. எவ்வித பத்தியமுமில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும்பயமின்றி உபயோகிக்கலாம்.

மின்சார ரசத்தின் அநுபோகம் எப்படி?

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனாமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

ஒரு புட்டியின் விலை ரூ. 2. தபால் செலவு வேறு.

மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம். (S. I.)

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.

இங்கிலீஷ் படிக்க அவலுடன் எதிர்ப்பார்த்திருந்த அன்பர்களே! என் நீங்கள் கவலைப்படுகிறீர்கள்!!

23000 ஜனங்களுக்கு ஆங்கிலம் விரைவில் கற்றுகொடுத்தது

7-ம் பதிப்பு] இப்புத்தகம் ஒன்றேதான்!!! [7-ம் பதிப்பு

7000-பக்கங்கள் கோண்ட முழு கலிகோ பயிண்டு புத்தகம் விலை ரூ. 2. ஸ்ரீராமர் சீதா திருக்கலியாண படமும், பட்டாபிஷேக ஆப்டோன் படமும் உள்ளது.

"ஆங்கில ஆசான் அல்லது போதினி"

எமது ரிஜிஸ்டர்ட் "லேடி டிரேட் மார்க்கு" போட்டிருக்கும் புஸ்தகம் பார்த்து வாங்குங்கள்!

மோசம் போகாதீர்கள்.

தமிழ் தெரிந்தவர்கள் ஆங்கில பாஷையை ஆசிரியர் இல்லாமலே அதி சீக்கிரத்தில் பணச் செலவின்றி சுயமாகவும், சுலபமாகவும் கற்றுக்கொள்ளலாம். உலக அனுபவத்திற்கு வேண்டிய பல விவகாரங்களின் பதங்களைப் படிப்படியாக நூதன பாட முறைகளுடன் வெளியிடப்பட்டிருக்கிறது. கிராம முன்சிப், கர்னம், கான்ஸ்டேபில்கள், கங்காணியர்கள், பட்லர்கள் முதலிய எல்லா தொழிலாளர்களுக்கும் மிகவும் முக்கியமானது.

23000-காப்பிகள் இதுவரையில் செலவழிந்திருப்பதே: இதன் பெருமையையும் இன்றியமையா உபயோகத்தையும் விளக்கிக்காட்டும். எல்லா ஊரிலும் எல்லா புத்தக ஷாப்பிலும் கிடைக்கும். எல்லா விடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலைத் தெருவு, மதராஸ்.

பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

மஹா சந்தனாதித் தைலம்

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!
வெயில் காலத்திற்கு மிகட்டயனுள்ளது!!

இம் மகா சந்தனாதித் தைலத்தை அரசர்களும் ஆங்கில மருத்துவர்களும், ஐகோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை நமது மருந்து விலைப்பட்டியின் நன்மதிப் பிதழில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0
12-அவுன்ஸ் 2-4-0. 6-அவுன்ஸ் 1-3-0

தமிழ் மருத்துவ சாலை,
220 தங்கசாலைத் தெரு, சென்னை

இனாம்! இனாம்!!

ரகஸ்ய ரத்னம்

அல்லது

வாழ்க்கை நலம் புகட்டும் நூல்.

வைத்திய அனுபவங்கள், வாழ்வின் மர்மங்கள், இரகசியக் குறிப்புக்கள், விவாகமானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்களின் சம்பந்தமான பலவகை விவரங்கள் இல்லற சார சங்கிரகம் ஆகிய பலவும் அடங்கியது.

விலை இல்லை; தபாற் செலவு இல்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,
தபாற் பெட்டி 222, மதராஸ்.

கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ் (லிமிடெட்) ஈரோடு பிராஞ்சு பிரசில் அச்சிடப்பெற்று சா. இராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது